

# திருக்குறள் இன்பத்துப்பால்

## (குழந்தைகளுக்காக)



ச.பெ. பாபாராஜ் (மதுரை பாபாராஜ்)

# திருக்குறள்
# இன்பத்துப்பால்
## (குழந்தைகளுக்காக)

சு.பெ. பாபாராஜ்
(மதுரை பாபாராஜ்)

சான்றோர் தளம்

**திருக்குறள் இன்பத்துப் பால்** (குழந்தைகளுக்காக)
***சு.பெ. பாபாராஜ்*** ©
*செல்லிடப்பேசி: 90032 60981*
*மின்னஞ்சல்:* spbabaraj@gmail.com

First Edition: September 2020
Pages: 184
Price: ₹ 50

Publisher:
Sandrore Thalam
1/1, 3rd Main Road, Narayana Samy Garden,
Kodungayur, Chennai-600 118

Marketer:
BETTER YOURSELF PRODUCTS.
1/1, 3rd Main Road, Narayana Samy Garden,
Kodungayur, Chennai-600118

All rights reserved. No part of this publication may be produced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photo copying, recording, physic or otherwise without the prior permission of the author.

# இன்பத்துப்பால்-இளையோர்பால்

## ஓர் ‘எழிற்பால்’

“தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்”

– திருக்குறள் 19

*பிறருக்கு வழங்குவதாகிய தானமும், தன்பொருட்டுச் செய்வதான தவமும் உடைய வானம், மழையை வழங்காவிடில் வியப்பிற்குரிய பேருலகில் நிகழமாட்டா என்பது பொருள்.*

*விண், மண், நீர், தீ, காற்று எனப்படும் ஐம்பெரும் ஆற்றல்கள்தாம் மனிதர்களாகிய நம்மை ஆட்டுவிக்கிறது. எண்ணம், சொல், செயல் இவைமூன்றும் ஐம்பெரும் ஆற்றல்கள் வழி நம்மை மேம்படுத்துகின்றன அல்லது புறம் தள்ளுகின்றன. இக்கருத்து இயற்கையால் முடிவு செய்து வடிவமைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களிலும் அப்படியே இருக்கக் காணலாம். பசி, நீர்வேட்கை, உறக்கம் போன்றவை அனைத்து உயிரினங்களுக்கும் எப்படி பொருத்தமாக உள்ளதோ அப்படியே காம உணர்வுகளும் ஐம்பெரும் ஆற்றல்களுக்குட்பட்டு எல்லா உயிரினங்களுக்கும் அப்படியே பொருந்தி வருகின்றன.*

*மனிதன் இயற்கையோடு ஒன்றியோ அல்லது எதிர்த்தோ செயல்படுவது என்பது ஒரு தொடர் நிகழ்வு. பல்லாண்டு காலமாக நெடிதுயர்ந்தோங்கி வரும் ஆலமரங்கள்,*

அரசமரங்கள் எல்லாம் தொட்டிச் செடிகளாகி, அதாவது 'போன்சாய்' இனக் குட்டை மரங்களாகிக் காணப்படுகின்றன. போன்சாய் இன மரங்கள் எப்படி நமக்கு வியப்பையும், மகிழ்ச்சியையும் வழங்குகிறதோ அதுபோல பருவ வயதினருக்கு உண்டாகும் காம உணர்வுகள் வீச்சு, வேகம் போன்றவை 'காமம்' என்ற போர்வையை விலக்கியபின் குழந்தைகளுக்கான அல்லது சிறுவர், சிறுமியர்களுக்கான 'போன்சாய்' பாலாகி, இளையோர்பால் ஓர் எழிற்பாலாகவே இங்கே விளங்குகின்றன.

குழந்தை இலக்கியத்தில் 'திருக்குறள் – இன்பத்துப்பால்' குழந்தைகளுக்கான பாலாக – கவிதை வடிவில் வெளிவருவது என்பது ஒரு புது முயற்சியாகும். மதுரை பாபாராஜ் அவர் களின் புதுச்சிந்தனை திருக்குறளை, ஹைக்கூ ஆக்கவில்லை. ஆனால் இன்பத்துப்பாலின் கருத்துகள் சிறுவர்–சிறுமி யரிடையேத் தோன்றும் "ஹைக்கூ' செய்திகளாகிவிட்டன.

எடுத்துக்காட்டாக குறள் 1121 தனை நோக்குங்கள்.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்."

– திருக்குறள் 1121

இதற்கு மதுரை பாபாராஜ் இப்படிக் கூறுகிறார்:

பால்பற்கள் முளைத்த நிலை!
மழலை பேசுகின்ற
என்குழந்தை
வாயொழுகும் உமிழ்நீரோ
பாலும் தேனும்
கலந்த சுவைதரும்
அமுதந்தான்.

இலக்கியச் சுவைநீர் இங்கே சொட்டுகிறது. தன் மழலையின் வாயிலிருந்து ஒழுகும் நீர் ஐம்படைத்தாலியை

*நனைப்பது போன்ற நிகழ்வு நமக்கும் நினைவிற்கு வருகிறது.*

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள."

– திருக்குறள் 1101

அம்மா!
பக்கத்துவீட்டு பாப்பாவைப்
பாத்தேன்.
அதைப் பாக்கப் பாக்கப் பரவசம்!
மழலையக் கேட்டா இன்பம்!
முகர்ந்து பாத்தா வாசம்!
முத்தம் கொடுத்தா களிப்பு!
தொட்டுத் தூக்குனா சிலிர்ப்பு!
எல்லாமே அந்தக் குழந்தைகிட்ட
இருக்குமா!

*உண்மைதானே? இயற்கையான வழக்குச் சொற்களில் வாசமிகுக் கவி வரிகளைத் தானே தந்துள்ளார் மதுரை பாபாராஜ் அவர்கள்.*

*அடுத்த குறளை நோக்குங்கள்:*

"பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு."

– திருக்குறள் 1280

நானும் என்அம்மாவும்
சித்தி வீட்டில் கடந்த மூன்று நாளாக
தங்கி இருக்கின்றோம்!
எனக்கு பள்ளி விடுமுறைதான்!
அம்மா இன்று புறப்படச்சொல்கின்றாள்!
சித்தி மகள் கவிதாவுக்கு விடுமுறைதான்!

கவிதாவைப் பார்த்தேன்!
கண்களால் தூதுவிடுகின்றாள்!
இப்பொழுது போகவேண்டாம்
என்று கூறுகின்றாள்!
இது கவிதாவின்
அழகுக்கு அழகு சேர்க்கிறது!
ரசித்துச் சிரித்தேன்!

'வாய்மை எனப்படுவது வருந்தாது உரைத்தல்
தூய்மை எனப்படுவது உள்ளத் தூய்மை
இன்பம் எனப்படுவது ஈறில் இன்பம்
அன்பெனப் படுவது ஆர்வம் உடைமை'

என்கிற சமணர் சிரேணிக மாமன்னனின் கருத்தை ஈண்டு எண்ணிப் பார்க்கின்றேன். சங்க இலக்கியங்களுள் தலைசிறந்த வாழ்வியல் நூலான திருக்குறள் காமத்துப் பாலில் அகவாழ்வின் வெற்றியைச் சிறப்புற எடுத்துரைக்கின்றது. அந்த சந்தனத்தின் நறுமணம் தன்னை சிதறாது சிறுவர்களுக்கும் எடுத்துப் பூசிவிடுகிறார் அவர்கள் விரும்பும் வண்ணம்; அல்லது அவர்களின் கோணத்தில் நூலாசிரியர் இறங்கி நோக்குகிறார் என்றே நாம் கருதுகின்றோம்.

'நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப..'

என்ற பெருங்காப்பியத்தின் இலக்கண வரி ஈண்டு பொருந்தி யிருக்கக் காணலாம்.

பெற்றோரின் ஆடைகளைப் பிள்ளைகள் உடுத்திப் பார்ப்பது போன்றது இது. அம்மா அப்பா விளையாட்டைப் பிள்ளைகள் சிறுமணல் வீடுகட்டி ஆடுவது போன்றது இது. இன்பத்துப்பால் ஆடையை இப்படியும் பிள்ளைகளுக் கானதாக ஆக்கிட முடியுமா? வியக்கின்றேன்.

திருக்குறள் என்னும் சிறப்புப் பெற்ற குறள் கருத்துகளை எழிற்படுத்தி, மிகவும் விழிப்புடன் பிள்ளைகளுக்கு நிலாச்

*சோறு ஊட்டுவதுபோல ஊட்டி விடுகிறார் மதுரை பாபாராஜ். இவரின் நல்ல கற்பனையும், களத்திடை இளை யோரின் பாத்திரங்களும் வெகு அருமை. வயது வந்தோருக் கான காமத்துப்பாலை நுண்ணாடி வழி விரிவுபடுத்திக் காட்டினால்தான் புரியும். இங்கே அதே இன்பத்துப்பாலை பொம்மைக் கண்ணாடி அணிந்துகொண்டு, தங்களுக்கான எண்ண ஓட்டத்திலேயே பயணம் செய்யும் பிள்ளைகளுக்கு என்றே சுகமாக அமைத்துள்ளார் நூலாசிரியர். நோக்கமும் ஆக்கமும் புதிய உலகியல் பார்வையைத் தோற்றுவிக்கின்றது. இலக்கியங்களில் கொண்டாடப்பட்டு வரும் இன்பத்துப் பாலை இப்படியும் கொண்டுபோக முடியும் என்பதற்கான புதிய எழுச்சிதான் இந்த நூல்.*

*மதுரை பாபாராஜ் அவர்கள் பணிநிறைவு செய்திட்ட கணக்காளர், பணிநிறைவு செய்தவுடன் வாழ்நாள் முடிந்து விட்டதாக எண்ணி, வாளாதிருந்து வீழ்ந்துவிடும் எளிய மாந்தர் அல்லர் இவர்.*

“கற்கை நன்றே! கற்கை நன்றே!!
பிச்சைப் புகினும் கற்கை நன்றே!”

*என்னும் அவ்வையாரின் வரிகளை உணர்ந்தவர் ஐயா.*

*‘யான்பெற்ற இன்பத்தைப் பெறுக இவ்வையகம்’ என்று, திருக்குறள் என்னும் தேனடையைப் பிழிந்து பிழிந்து எல்லோருக்கும் வாரி வழங்கிவிட முயற்சித்துள்ளார். யாருக்கு எப்படி வழங்கலாம், வழங்க முடியும் என்று சிந்தித்து, தனது மழலை வரிகளில் சிறந்த கருத்துகளை உள்ளடக்கி, உயர்த்தித் தருகின்றார்.*

*தமிழுடை ஞாலம் மதுரை பாபாராஜ் அவர்களைத் தம்மிருக் கைகளை நீட்டி எதிர்கொள்கின்றது. எதிர்காலத்தில் இவரது முயற்சியைப் பலரும் போற்றுவர்.*

*ஊடலுவகை அதிகாரத்தில் 1330 ஆவது திருக்குறளுக்கு ஆசிரியரின் கவிதை வரிகள் அப்படியே இவரின் புதிய முயற்சிக்கும் பொருந்தும்.*

"நட்பிற்கு இன்பமே
செல்லச் சண்டைதான்!
பிரிந்து சேரும்பொழுது
அந்தச் சண்டை மீட்டுவதே
ஓர் இன்பராகந்தான்!"

*மதுரை பாபாராஜ் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து, பல புதிய எழுச்சிமிகு நூல்களையும் படைத்திட வேண்டும்.*

*நல்வாழ்த்துகள்!*

*வாழ்க தமிழ்! வளர்க இலக்கியவின்பம்!!*

சென்னை-600 074

நற்றமிழ் **செ.வ. இராமாநுசன்**

# பாபாராஜின் பண்புடை முயற்சி!

முப்பால் என்று சுட்டப்படும் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது.

அறத்துப்பால், பொருட்பால் இரண்டு பகுதிகள் மட்டுமே பெரும்பாலும் மாணவர்களுக்குப் பாடத்திட்டமாகத் தொடர்ந்து வைக்கப்பட்டு வருகின்றன. பள்ளி மாணவர்கள் தொடங்கி கல்லூரி மாணவர்கள் வரையில் இதே நிலைதான்!

கடைசி பாலான, இன்பத்துப் பாலை கடை நிலையிலேயே வைத்துதான் அனைவரும் பார்த்து வருகின்றனர், இலக்கிய மேடைகளில் கூட. அறத்துப்பாலும், பொருட்பாலும் மேற்கோள் காட்டப்படுகிற அளவுக்கு இன்பத்துப்பால் பேசப்படுவது இல்லை.

போற்றுதற்குரிய கவிஞர் மதுரை பாபாராஜ் அவர்கள் அந்த முயற்சியை முற்றிலும் புதிய கோணத்தில் செய்திருக்கிறார். இன்பத்துப் பாலை எடுத்துக் கொண்டது மட்டுமல்ல: அப்பகுதியிலுள்ள குறள்களுக்கு... குழந்தைகளுக்கு விளக்கம் தருகிறார். ஆம்! குழந்தைகளுக்கு விளக்கம் தருகிறார்.

கத்தி முனையில் நடப்பதைப் போன்ற ஒரு பணி. சற்று இடறினாலும் தவறாகிவிடும். அவ்வாறு நேர்ந்து விடாமல் மிக அருமையாக கையாண்டிருக்கிறார் திரு. பாபாராஜ்!

*காதலன் காதலியாக இருக்கிற நிலை களவு நிலை; கணவன் மனைவியாக இருக்கிற நிலை கற்பு நிலை. களவு நிலையிலும் கற்பு நிலையிலும் எழுதப்பட்டிருக்கிற திருவள்ளுவரின் குறள் வெண்பாக்களுக்கு, குழந்தைகளுக்குப் புரிகிற வகையில் விளக்க வேண்டும். இந்த அரிய பணியைச் செய்கிறபோது ஒரு சிறந்த உத்தியினை திரு. பாபாராஜ் அவர்கள் கைக்கொண்டிருக்கிறார்கள்.*

*காதல் என்ற சொல் சிற்றெல்லை உடையது அன்று; மாறாக எல்லையற்ற பேரெல்லை உடையது. பெற்றோர் களிடத்திலும், உறவினர்களிடத்திலும், நண்பர்களிடத்திலும்... தோன்றுகிற அன்பும் காதலின்பாற்பட்டவையே.*

*இந்த நுட்பத்தைத்தான் பாபாராஜ் அவர்கள் தனது உரை முழுக்க கையாண்டிருக்கிறார். காதலன்காதலி வர வேண்டிய இடங்களிலெல்லாம்.. தாயையும் சித்தியையும் உறவினர் களையும் நட்பையும் முன்னிறுத்தி உரை எழுதி இருக்கிறார். எடுத்துக்காட்டாக குறள் எண். 1124.*

“வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து”

*காதலியைக் காதலன் பிரிகிற இந்தச் சூழலை விளக்குவதற் காக... தாத்தா பாட்டி வீட்டிற்கு விடுமுறைக்குச் சென்றிருக்கிற குழந்தைகள்... அந்த தாத்தா பாட்டியை விட்டு நீங்குகிற காட்சியைச் சொல்லி குழந்தைகளுக்கு விளக்குகிறார்.*

*அதே வேளையில் அதுபோன்ற மாற்றம் தேவைப்படாத குறள்களுக்கு நேரடி விளக்கத்தை மாற்றமின்றி வழங்கியும் இருக்கிறார். எடுத்துக்காட்டாக குறள் எண் 1168.*

“மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை”

*“உலகத்தையே உறங்கச் செய்துவிட்டு என்னைத்தவிர வேறு துணையில்லாமல் இருக்கின்றாய் நீ...” என்ற விளக்கத்தை இயல்பாகச் சொல்லிச் செல்கிறார்.*

*மற்றுமோர் இனிய அழகான பொருத்தமுடைய விளக்கம் ஒன்று... இதோ! குறள் எண் 1186.*

"விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு"

*"தோழி கலையும் நானும் தேர்வுக்கு சேர்ந்து படிக்கிறோம்... அவள் எந்திரிச்சு போன உடனே,,, என் உடம்புல பயமும் படர்ந்துருது!"*

*எளிய விளக்கம்!*

*புதிய முயற்சி!*

*அரிய பணி!*

*"கருத்தியல் தீண்டாமைக்கு" உட்பட்டிருந்த இன்பத்துப் பாலை குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் கொண்டுவந்து சேர்த்திருக்கும் கவிஞர் திரு பாபாராஜ் அவர்களின் இந்த முயற்சி வெல்லட்டும்!*

*இன்பத்துப் பாலில் இருப்பது, 'ஆகச்சிறந்த உளவியலே' என்ற அறிஞர்தம் கருத்து அனைவரையும் சென்றடையட்டும்!*

*நல்வாழ்த்துகள்!*

*பேரன்புடன்*

**தமிழ் இயலன்**
இயக்குநர்,
நான் ஓர் ஐ.ஏ.எஸ். அகாடமி, சென்னை
9443019087
thamizhiyalan@gmail.com

# குழந்தைகளுக்கு கவிதை வடிவில்

அருமை... மகிழ்ச்சி... புதியசிந்தனை... வள்ளுவர் உள்ளம் மகிழும்...

– அன்வர்பாட்சா

---

VOV RAJENDIRAN:

Absolutely a different approach, fresh thinking...

சிற்பி

காதல் கவிதைகளைக் கருத்துக் கவிதைகளாக்கும் பாபா.

---

திரு. மதுரை பாபாராஜ் அவர்களுக்கு....

இன்பத்துப்பாலை இப்படி அடிப்படையை யேமாற்றி எழுதுவதற்கு பெரியதுணிச்சல். வேண்டும். அது உங்களிடம் உள்ளது தங்கள் சிந்தனை புதிது. அன்றாடம்படிக்கிறேன் காத்திருந்து. அழகியல், கருத்துச்செறிவு, குழந்தைகளுக்குப் புரியும் நல்ல சிந்தனை... யாரும் இதுவரை சிந்திக்காத புதியசிந்தனை தொடருங்கள். நாங்களும்தொடர்கிறோம்.

– பொற்கைப்பாண்டியன்

---

I R BALAKRISHNAN-VOV COIMBATORE

காமத்துப் பாலை நன்றாகக் குறுக்கி – வெகு
சாமர்த்தியமாக புட்டிப்பாலாக்கி
குழந்தைகளுக்கு ஊட்டியுள்ளீர் பாபா –
குழந்தைத் தனமான
வெறும்கிறுக்கல் அல்லஇது;
குழந்தைகளுக்கான குறள்ஓவியம்.
சிரம்தாழ்ந்து வாழ்த்துவதில்
பெருமைகொண்டு மகிழ்கின்றேன்....

---

*250 குறட்பாக்களும்உணர்த்தும்உறவின்சுவையைசிறுபிள்ளைகள்உணரவும், அவற்றில் காட்டிய மெய்ப்பாடுகளோடு இணைத்து தங்கள் வாழ்வினை செம்மையாக நடத்தவும்; புதுக்கவிதை வடிவில் உள்ள பாபாராஜ் அண்ணனது ஒவ்வொரு கவிதையிலும், நாள்தோறும் மேவும் பழக்கவழக்கங்கள் நயம் சொட்டுகிறது என்று கூறினால் அது மிகையன்று.*

*நண்பர்கள் பலரிருப்பர். சிலர்அருகில், சிலர்தொலைவில், சிலரோடு சண்டைகள்வரும், பழிப்புகள், பின்னர் சமாதானங்கள் என நடக்கும் எண்ணற்ற நாடகங்களை புதுக்கவிதை வடிவில் பிணைந்திருக்கிறார்.*

*ஒவ்வொரு பாவின் இயல்பான பேச்சும், உணர்ச்சிகளை உணர்த்தலும் அவ்வளவு கடினம் எனினும், தனக்கே உரித்தான எளிய நடையில் சொல்லியிருப்பது மிகவும் அருமையாக இருக்கிறது!*

– டாக்டர் ராஜா

---

# என்னுரை

**திருக்குறள் இன்பத்துப் பால் (குழந்தைகளுக்காக) எழுதியதன் பின்னணி**

*வள்ளுவத்தின் மூன்றாம் பால் இன்பத்துப்பால்.*

பாடுபொருள்கள்:

*தலைவன் தலைவி, ஊடல், கூடல், இன்பம், பிரிவு, சந்திப்பு. இதைக் குழந்தைகள் நிலையில் எப்படிப் புரிய வைக்கலாம் என்று நினைத்ததன் விளைவே இந்த நூல்.*

*இன்பத்துப் பாலையும் குழந்தைகளுக்காக எழுதமுடியும் என்று நம்பினேன். ஒவ்வொரு அதிகாரமாக எழுதுவது கடினமாக இருந்தது. எனவே ஒவ்வொரு குறளுக்கும் ஒரு நிகழ்வாக எழுதினேன்.*

*குழந்தைகளின் வாழ்க்கையில் நட்பு, தோழமை அதனால் விளையும் பிரிவு, ஊடல், கூடல், சிலக் கோபதாபங்கள் எல்லாம் வீட்டிலும் பள்ளியிலும் சந்திக்கின்றனர்.*

*இதற்கு வள்ளுவம் அறிந்த எங்களுடைய வள்ளுவர் குரல் குடும்ப நண்பர்களிடம் வரவேற்பு இருந்தது. அவ்வப்போது பதிவிட்ட வாழ்த்துகளையும் நண்பர்களின் வாழ்த்துகளையும் பதிவு செய்துள்ளேன்.*

*இந்த நூலுக்கு அருமையான அணிந்துரைகளை வெளிச்சம் தொலைக்காட்சியில் பொருட்பால் விளக்கத்தை நாளும் சொல்லிவரும் நண்பர் தமிழ்த்திரு. செ.வ. இராமாநுசன் அவர்களும் பண்பாளர் திரு. தமிழியலன் அய்யாவும் வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மின்நூல் வெளிவரத் துணைபுரிந்த சான்றோர் தளம் நண்பர் திரு. அமிர்தம் பீட்டர் ராஜன் அவர்களுக்கும், அழகாக வடிவமைத்துக் கொடுத்த அன்பர் திரு. சு. கதிரவன் அவர்களுக்கும் நன்றி.*

*வாசகர்களின் ஆதரவை நாடுகின்றேன்.*

*என்றும் நட்புடனும்*
*நன்றியுடனும்,*
**மதுரை பாபாராஜ்**

# தகையணங்குறுத்தல்

## அழகின் வெளிப்பாடு

### தாயும் சேயும்

**குறள் 1081**

அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை
மாதர்கொல்? மாலுமென் நெஞ்சு.

*குழந்தையே!*
*நீ அழகின் அழகியோ?*
*மனங்கவர் மயிலோ? காதணிகள்அணிந்தநீ*
*அமுதச் சிறுமியோ? என்றெல்லாம்*
*மயங்குதடி எந்தன் நெஞ்சம்.*

**குறள் 1082**

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக் கொண்டன்ன துடைத்து.

*கண்ணே!*
*கண்மணியே!*
*அம்மாவை வைத்தகண்*
*வாங்காமல்*
*அப்படிஎன்ன பார்க்கிறாய்?*
*மறுபடிமறுபடியுமா*
*பார்ப்பது!*
*பார்வைக்குப் பார்வை!*
*எதிர்ப்பார்வையா?*
*நீமட்டும்வராம*
*கூடஒருபடையையே*

*கூட்டிவந்து*
*தாக்குறியே!*
*சரிதானாசெல்லமே!*

## தாயின்வலி

### குறள் 1083

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு.

*மகளே!*
*வேதனையென்றால்*
*என்னவென்று நானறியேன்!*
*இந்தப் பெண் வடிவத்தில்*
*உன்னைக்*
*காண்பதற்கு*
*மகப்பேறுவலி*
*துன்பந்தான்!*
*இருந்தாலும்*
*இன்பந்தான்*
*என்றுணர்ந்தேன்!*
*அழகானஉன்கண்கள்*
*உள்ளத்தைக்*
*கொள்ளைகொள்கிறது.*

## மகளின் கோபம்

### குறள் 1084

யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்.

*என் கண்ணுல்ல*
*செல்லமில்ல!*

*நான்ஏதோ கோபத்துல*
*அடிச்சுட்டேன்! கோபமா?*
*ஆமா!*
*நான் அந்தப்பக்கமா பாக்குறப்ப*
*நீஎன்னப் பாக்குற?*
*கோபத்தோட பாத்து*
*மெல்லசிரிக்குற!*
*உன்னப் பாக்குறப்ப*
*நெலத்தப் பாக்குற!*
*இதுவும் அழகாத்தான் இருக்கு!*

**குறள் 1085**

**கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கமிம் மூன்றும் உடைத்து.**

*ஏங்க!*
*நம்ம மகளுக்கு*
*அவகேட்டசாப்பாட*
*நேத்து தரலயாம்!*
*சொன்னமாதிரி*
*கொண்டு வரலனு*
*பள்ளித் தோழிகள்*
*கேலி செஞ்சாங்களாம்!*
*அதுக்காக பாடா படுத்திட்டா!*
*அழித்துவிடும் நெருப்போ?*
*அழகான விழியோ?*
*மானின் மருட்சியோ?*
*வள்ளுவர் சொல்றதப் போல*
*இந்த மூணுமே*
*அவகண்ல தெரியுதுங்க!*

## குறள் 1086

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்.

*அம்மா!*
*நீயே சொல்லு!*
*அப்பா*
*மகளை திட்டக்கூடாதா?*
*அப்பிடி கோவிச்சுக்குறா!*
*புருவம் வேற வளைஞ்சு*
*இருக்கு!*
*பயமாவேற இருக்கு!*
*நேரா இருந்துருந்தா*
*கண்ணு*
*இப்படி பயமுறுத்துமா?*

## குறள் 1087

கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்

*ஏண்டியம்மா*
*பத்தும் பத்தாம*
*மேலாடை!*
*இவ்வளவு நகையை வேற*
*போட்டுக்கிட்டு*
*நிக்கிற?*
*பாத்தாஎப்படி*
*இருக்குது*
*தெரியுமா?*
*குட்டியானை*
*முகப்படாம்*

*போட்டுக்கிட்ட*
*மாதிரி இருக்குதும்மா*
*தாயே!*

**குறள் 1088**

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு.

*நான்மேடையில்*
*முழங்கினால்*
*வலுவான வாதங்கள்*
*கரைபுரண்டே ஓடும்!*
*போட்டிகளில் வெற்றிதான்!*
*ஆனால்*
*என்மகளின்*
*ஞான ஒளிவீசும்*
*நெற்றியைக் கண்டால்*
*எல்லாம் அடங்கிவிடும்!*
*தோல்விதான்!*
*மேடையில்*
*சிகரம்!*
*மகளின்முன்*
*தகரம்!*
*குழந்தைக்காக*

**குறள் 1089**

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து.

*அம்மாடி!*
*நம்ம மகளைப்*
*பாரேன்!*

*மாசு மருவற்றப்*
*பெண்மான் பார்வை! குழந்தைப் பார்வை!*
*பெண்குழந்தைக்கே உரிய*
*இயல்பான நாணம்!*
*இதுவே அவளுக்கு அணிகலன்தான்!*
*வேறு அணிகலன்கள்*
*இவளுக்குப் போடனுமா என்ன?*

**குறள் 1090**

**உண்டார் கணல்லது அடுநறாக் காமம்போல்**
**கண்டார் மகிழ்செய்தல் இன்று.**

*இந்தச்*
*சின்னவயசுல*
*நம்ம மகளுக்கு*
*இருக்குற அறிவப்பாத்தியா!*
*கேள்விகேட்டுத்*
*தெணறவக்கிறா!*
*என்னமா திருக்குறள் சொல்றா!*
*சேட்டையும்பண்றா!*
*மதுவைக்*
*குடிச்சாதான்*
*போதைவருமாம்!*
*இவளப் பாத்தாலே*
*எனக்குப்*
*பெருமித போதைவருதே!*
*நாம் பெற்ற செல்லமில்ல!*

# 110. குறிப்பறிதல்

**குறள் 1091**

இருநோக் கிவளுண்கண் உள்ளதொரு நோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

*இந்தா*
*உன்மகளப்பிடி!*
*கடையவே*
*உண்டில்லனு ஆக்கிட்டா!*
*கேட்டபொம்மய*
*வாங்கித்தரலயாம்!*
*இவபாத்த பார்வை*
*இருக்கே அப்பப்பா!*
*வர்ரவழியில*
*சமாதானமாகி சிரிக்கிறா!*
*ஒரே கண்ணுதான் ரெண்டு பார்வை!*
*ஒன்னு வேர்த்து கொட்டவச்சு*
*நோயத்தருது! இன்னொரு பார்வை*
*சிரிப்பால மருந்தாகி குணப்படுத்துது!*
*வேடிக்கைதான்!*

**குறள் 1092**

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

*மலர்விழி!*
*அம்மா வந்துட்டேன்!*
*கதவெல்லாம் தெறந்திருக்கு!*

*எங்கே ஒளிஞ்சிருக்க?*
*ஆகா!*
*கதவுக்குப் பின்னால இருந்து*
*குறும்பாபாக்குற?*
*கண்ணச் சுருக்கிவேற பாக்குற!*
*எதையோ மறைக்கிற!*
*வெளியவா!*
*ஆகா! அப்ப ரவந்தாச்சா!*
*ரெண்டுபேருமா!*
*அன்பான முழுப்பார்வையவிட*
*இது*
*அழகா இருக்கே!*

## சிறுமிகளின் நட்பு

### குறள் 1093

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

*நேற்றுதான்*
*பக்கத்து வீட்டுக்குக்*
*குடிவந்தாள்.*
*நான்படிக்கும் பள்ளியிலேயே*
*அவளும் படிக்கின்றாளாம்!*
*நட்பைத் தெரிவிக்கும்*
*ஆசையில்*
*சிறுபார்வைபார்த்து*
*தலைகுனிந்து கொண்டாள்!*
*நட்பை வளர்ப்பதுபோல்*
*இருக்கிறது இந்தச்செயல்.*

### குறள் 1094

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும் .

*ஏம்மா தேன்மொழி !*
*நானும் பாத்துக்கிட்டே*
*இருக்கேன்*
*பள்ளிக்கூடத்துல இருந்து*
*வந்ததுல இருந்து*
*நான்பாத்தா*
*கீழேபாக்குற !*
*கொஞ்சம் நகர்ந்தா*
*என்னைப் பாத்துச்*
*சிரிக்குற !*
*என்னாச்சு ?*
*பள்ளிக்கூடத்துல*
*பிரச்சினயா ?*
*இல்லம்மா தமிழ்ப் பாடத்துல*
*நூறுவாங்கிட்டேன் !*
*சொன்னா நீ*
*எப்படிகொஞ்சுவேன்னு*
*நெனச்சேன் !*
*அவ்வளவுதான்.*
*போடி குறும்புக்காரி...*

## செல்லக்கோபம்

### குறள் 1095

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

*பள்ளித்தோழி கயல்*
*நேற்று டூவிட்டா!*
*இன்னொருதோழியின்*
*பிறந்தநாள் விழாவுக்கு வந்தேன்!*
*அவளும் வந்திருக்கா!*
*நேருக்குநேரா*
*பாக்காம*
*கண்ணைச் சுருக்கிப் பாக்குறா!*
*பழம்போட நெனக்கிறா!*

**சாடைப்பேச்சு**

**குறள் 1096**

உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

*என்னம்மா*
*ஒருமாதிரி இருக்கே!*
*அம்மா கூப்பிடறா! போம்மா!*
*அம்மாவா!*
*யாருப்பா அது!*
*நால்லாம் பேசமாட்டம்பா!*
*என்னதிட்றா!*
*மொறக்கிறா!*
*அவளோட இனிமே*
*பேசவே மாட்டேன்!*
*பாரேன்!*
*சாட மாடயா பேசுறதும்*
*அழகுதான்!*
*அம்மா சிரித்துக் கொண்டாள்.*

# குறிப்பறிதல்
# குழந்தைகளுக்காக

**குறள் 1097**

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுஉற்றார் குறிப்பு.

*என்னங்க*
*இவ இப்படி பண்றா?*
*எப்ப பாத்தாலும்*
*சிடுசிடுன்னுபேசறா!*
*ஏதோ மூணாவது மனிதரிடம்*
*நடந்துக்கறமாதிரி நடக்குறா!*
*ஆனாமனசுக்குள்ள*
*என்னைப்பத்தி உயர்வா நெனக்கிறா!*
*நேத்து பக்கத்து வீட்டு பாமா*
*வந்திருந்தாங்க.*
*ஏம்மா உன்பொண்ணு*
*உன்னைப்பத்தி அவ்வளவு*
*பாராட்டி சொல்றான்னு சொன்னாங்க.*
*அவ பலாப்பழம் மாதிரிங்க!*
*வெளியமுள்ளு! உள்ள இனிமையானசுளை!*

**குறள் 1098:**

அசையியற்கு உண்டாண்டோ ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.

*அம்மா!*
*இந்த கவிதா இருக்காளே*
*ஒரு நெல்லிக்காய்*

*வைத்திருந்தாள்!*
*எனக்கும் தாவென்று*
*கேட்டேன்மா!*
*அவ, போய் ஔவையிடம்கேள்*
*என்றுசொன்னாள்!*
*பழுப்பு காட்டிவிட்டு வந்துவிட்டேன்!*
*கொஞ்ச நேரத்துக்கு முன்னால்*
*நம்ம தெருவழியே போனா!*
*என்னப்பாத்து தலகுனிஞ்சு*
*சிரிச்சாம்மா!*
*என்னோட பேசணும்ற*
*குறிப்புதாம்மா*
*அது!*
*நானும் ரசிச்சேம்மா!*

**குறள் 1099**

**ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே உள.**

*அப்பா!*
*என்னுடைய வகுப்புத் தோழி*
*நாலு பேரத் தாண்டி*
*உக்காந்திருக்குராப்பா!*
*முன்னபின்ன தெரியாத மாதிரி*
*அடிக்கடி பாத்து*
*திரும்பிக்கிறா!*
*இந்தமாதிரி பார்வைக்*
*குறும்பெல்லாம்*
*நெருக்கமான நட்புலுதான்*
*இருக்கும்னு நெனக்கிறேன்!*

**குறள் 1100**

**கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.**

*அம்மா! அமெரிக்கவுல இருந்து*
*குழலி வந்திருக்காம்மா!*
*கிட்டத் தட்ட பத்து ஆண்டுகள்*
*ஆயிருச்சு பாத்து!*
*வீட்டுக்குள்ளே நுழஞ்ச உடனே*
*என்னையே வச்சகண்ண வாங்காம*
*பாத்துக்கிட்டே இருந்தாம்மா!*
*பேச்சே வரலே!*
*தோழிகளின் கண்கள்*
*சந்திச்ச பிறகு*
*சொற்களுக்கு வேலையே இல்லம்மா!*
*அவ மனஓட்டத்த புரிஞ்சுகிட்டேம்மா!*

# III. புணர்ச்சிமகிழ்தல்

## குழந்தை தரும் இன்பம்

**குறள் 1101**

**கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே உள.**

*அம்மா!*
*பக்கத்துவீட்டு பாப்பாவைப்*
*பாத்தேன்.*
*அதைப் பாக்கப் பாக்கப் பரவசம்!*
*மழலையக் கேட்டா இன்பம்!*
*முகர்ந்து பாத்தா வாசம்!*

*முத்தம் கொடுத்தா களிப்பு!*
*தொட்டுத் தூக்குனா சிலிர்ப்பு!*
*எல்லாமே அந்தக் குழந்தைகிட்ட*
*இருக்குமா!*

## குழந்தையின் ஏக்கம்

### குறள் 1102

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.

*என்னங்க!*
*குழந்தைக்கு உடம்பு*
*அனலா கொதிக்குதுங்க!*
*மருத்துவர அழச்சுட்டுவாங்க!*
*மருத்துவர் வந்தார்!*
*குழந்தை முனகலைக் கேட்டார்!*
*ஆயா! ஆயா! என்று சொல்லிக்கொண்டிருந்தாள்!*
*அந்த ஆயாவை நாங்கள் நிறுத்திவிட்டோம்!*
*என்றனர்!*
*உங்களைவிட ஆயா அன்புடன்*
*பார்த்திருக்கின்றார்.*
*அவரை உடனே வரச்சொல்லுங்கள்.*
*எல்லாம் சரியாகிவிடும்.*
*மருந்தால் நோய்கள் குணமாகும். இங்கே*
*ஆயாதான்நோய்! ஆயாதான் மருந்து!*
*என்றார் மருத்துவர்.*

### குறள் 1103

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

*ஏங்க*
*இங்க வாங்களேன்!*
*அண்ணன் தோள்ள படுத்து*
*தூங்குற தங்கைய பாருங்க!*
*என்னென்னமோ உலகம்னெல்லாம்*
*சொல்றாங்களே*
*அங்கெகெடக்கிற இன்பமெல்லாம்*
*இந்தச்சின்னஞ் சிறுசுகளுடைய*
*இந்தக் களங்கமற்ற*
*இன்பத்துக்கு*
*ஈடாகுமா!*

## பேத்தியின் பிரிவு

### குறள் 1104

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்

*ஏம்மா*
*என் செல்லப் பேத்தி!*
*நீ உங்க மாமா வீட்டுக்குப்*
*போய் பத்துநாளாச்சு.*
*இன்னக்கி வந்துட்ட!*
*இந்தப்பாட்டி துடிச்சுத்தான் போயிட்டேன்!*
*தெரியுமா?*
*காச்சலடிக்கிற மாதிரி*
*என்னென்னமோ பண்ணுச்சு!*
*நீபக்கத்துல வந்தவுடனே*
*மனசுகுளுந்து போச்சு!*
*இந்தமாதிரி நெருப்ப*
*எங்கிருந்து வாங்குன?*

## குழந்தை தரும் இன்பம்

### குறள் 1105

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

*இவளோ*
*தேன்மழலைச்சிட்டு!*
*கட்டி அணைச்சுக்*
*கொஞ்சும் போதெல்லாம்*
*நான் விரும்புற பொருள்தர்ர*
*இன்பம்மாதிரி*
*மலர்மணம்வீசும்*
*இவளுடைய தோளின் பிணைப்பு*
*இன்பமழை பொழியுது.*

### குறள் 1106

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்.

*என்னுடைய செல்லக்குட்டி*
*என்னோட தோள்ல தலசாச்சு*
*கழுத்தக் கட்டிப்பிடிச்சுப்*
*படுத்துக்குறா!*
*ரெண்டுபாட்டு!*
*மலர்ந்தும் மலராத பாட்டும்*
*சின்னஞ் சிறுகண்மலர்*
*பாட்டும் பாடுனா*
*சொக்கித் தூங்கிருவா!*
*அவளுடைய தோளணைப்பு*
*இன்பமா இருக்கு எனக்கு!*
*அவதோள்கள்*

*அமுதக்கடைசல் போல*
*உணரவைக்குது.*
*இவளுக்கு அம்மான்னால*
*பெருமையாஇருக்கு.*

## கொஞ்சும் இன்பம்

**குறள் 1107**

தம்மில் இருந்து தமதுபாத் துஉண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

*என்னம்மா*
*என்னமோ சொல்லணும்னு*
*வந்தியே*
*இப்பச்சொல்லு!*
*நாம உழைச்சு*
*சேத்ததை பலரோட*
*பகிர்ந்து உண்கிற*
*இன்பமே தனிதாங்க!*
*நம்ம குழந்தய*
*அணைச்சுக்கொஞ்சுற*
*இன்பம் இருக்கே*
*இதுவும் அதுபோலத் தாங்க!*

## மழலைப் பிஞ்சைத் தழுவும் இன்பம்

**குறள் 1108**

வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை
போழப்படாஅமுயக்கு

*அம்மா!*
*இன்னக்கி மத்தியானம்*
*உன்னுடைய பேத்தி*

*அதாம்மா என்மககிட்ட*
*படுத்திருந்தேன்!*
*தூங்கவைக்கிற முயற்சிதான்!*
*அவதிடீர்னு திரும்பி*
*என்னைக் கட்டிப்பிடிச்சாபாரு*
*காத்துபோகக்கூட எடமில்ல!*
*இருந்தாலும்*
*அதுவும்ஒருவகை இன்பந்தான்மா!*
*அப்படியே தூங்கிட்டோம்!*

## நளினக் கோபம்

### குறள் 1109

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

*ஏய்! மலர்விழி!*
*அந்தோ வராபாரு*
*கவிதா!*
*அவளோட ரெண்டு மூணுநாள்*
*நானு பேசறதே இல்ல!*
*செல்லக் கோபத்துல இருக்கேன்!*
*போதுண்டி!*
*அவளபாத்தா பாவமாஇருக்கு!*
*நான்போயி பேசிட்டுவரேன்!*
*கவிதா! கவிதா!*
*என்னயா கூப்பிடற!*
*ஆமா இப்ப இருந்து உன்னோட*
*பழந்தான்!*
*இனிமே இப்படியெல்லாம் செய்யமாட்டேன்!*
*நம்மநட்பு இப்பதான்*
*மகிழ்ச்சியா இருக்கு!*

### கற்றுத்தரும் குழந்தை

**குறள் 1110**

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

*நூல்களைப் படிக்கப் படிக்க*
*நமது அறியாமை*
*புதிது புதிதாக*
*தெளிவடைதல் போல*
*இந்தக்காலத்துக்*
*குழந்தைகளோட*
*பழகப்பழக*
*புதுசுபுதுசா*
*நெறைய*
*கத்துக்குறோம்.*

## 112. நலம்புனைந்து உரைத்தல்

### அனிச்சமலர் எம்மட்டும்!

**குறள் 1111**

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

*என்னமோ இந்த*
*அனிச்சம்பூதான்*
*மென்மையா இருக்குதாம்.*
*சொல்லிக்கிறாங்க!*
*இருக்கட்டுமே!*
*ஆனா என்மகளோட*

*மென்மைக்கு முன்னால*
*இந்தப் பூவெல்லாம்*
*தலகுனிஞ்சு நிக்கணுமாக்கும்!*
*தெரிஞ்சுக்குங்க!*

## கண்களுக்கிணையான மலருண்டோ

### குறள் 1112

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

*மனமே!*
*நம்குழந்தையின்*
*கண்களைப் பார்த்து*
*மற்ற மலர்களைப்போல*
*இருக்கும் என்று அந்த*
*மலர்களைப் பார்த்து*
*மயங்குகிறாயே!*
*சரியா?–*

## குழந்தையே அழகு

### குறள் 1113

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு.

*நாம நெனச்சமாதிரி*
*ஒருபெண்குழந்த*
*பெறந்துருச்சுங்க!*
*அவ வளரவளர*
*தோள் மூங்கில்போல இருக்கும்!*
*உடம்பு தளிர்போல மென்மை!*
*பல்லெல்லாம் முத்துக்கள்தான்!*

*உடம்புல இயற்கையான மணம்வீசும்!*
*கண்களுக்கு மைபோட்டுப் பாத்தா*
*வேல்போல தோற்றம்*
*இருக்கும்!*
*பாருங்க.*

### குறள் 1114

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று.

*அப்பா!*
*நானும்உங்க*
*குட்டிப் பேத்தியும்*
*வயல் வெளிப்பக்கம்*
*நேத்து சாயந்திரம்*
*நடந்து போனோம்!*
*குவளைப் பூவெல்லாம்*
*வெட்கத்தோட நெலத்தப்பாத்து*
*குனிஞ்சிக்கிருச்சு!*
*என்னடான்னுபாத்தா*
*உங்கபேத்தியோட*
*கண்களைப்போல*
*அவை இல்லையாம்!*
*என்னஅழகு பாத்தீங்களா?*

### குறள் 1115

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு
நல்ல படாஅ பறை.

*ஏங்கநம்ம*
*குழந்தையோட ஆசைய*
*பாத்தீங்களா!*

*அனிச்சம்பூக்கள*
*காம்ப நீக்காம*
*கூந்தல்ல சூடியிருக்கா!*
*அந்த எடைதாங்காம*
*அவளோட சின்னஇடுப்பு*
*ஒடியிற மாதிரி*
*தத்தளிக்குதாம்*
*வலிக்குதாங்க!*

## விண்மீன் கலக்கம்

### குறள் 1116

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்.

*அம்மா! அம்மா!*
*வானத்து நட்சத்திர மெல்லாம்*
*ஏம்மா*
*அங்கேயும் இங்கேயும் ஓடுது?*
*அதுவாடா செல்லம்*
*அது*
*உன்னோட முகத்துக்கும்*
*அந்த நிலாவுக்கும்*
*வேறுபாடு தெரியாம*
*கலங்கித் தவிக்குது*

## களங்கமில்லை

### குறள் 1117

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

*ஏம்மா*

*என்னோட பேத்தி*

*முகத்த பாத்தியா*

*அந்த நிலாவுக்கு*

*இருப்பதப்போல*

*மாசுமறு ஏதேனும்*

*இருக்கா?*

*களங்கமில்லாம*

*பளிச்சுனு இருக்கு!*

*வாடிகுட்டி!*

*பாட்டிகிட்டஓடிவா!*

## அன்பு வேண்டுமா?

### குறள் 1118

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

*நிலவே!*

*என்னை அப்படி*

*ஏன்பார்க்கிறாய்?*

*என்மகளைப்போல்*

*உன்னையும்*

*கொஞ்ச*

*வேண்டுமா?*

*அவள்முகம் போல*

*நீயும்*

*ஒளிவீசினால்*

*என்னுடைய அன்பு*

*உனக்கும் கிடைக்கும்!*

## நிலவே மாறு

### குறள் 1119

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

*அத்தைமடி*
*மெத்தையடி*
*என்று பாடி*
*என்தம்பி குழந்தையைத்*
*தூங்கவைத்துக்*
*கொண்டிருக்கின்றேன்!*
*நிலவே!*
*நீஏன் அடிக்கடிவந்து*
*பார்க்கிறாய்?*
*மலர்போன்ற விழிகொண்ட*
*இவள்முகம் போல*
*நீமாற நினைத்தால்*
*என்முன் தோன்று!*
*பலர்காண தோன்றாதே!*

### குறள் 1120

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

*அமுதக்கலசம்*
*போன்ற*
*என்மகளின்*
*பஞ்சுமென்மைப்*
*பாதங்களுக்கு*
*அனிச்சம்பூவும்*
*அன்னத்தின் பட்டுப்போன்ற*

*இறகும்*
*நெருஞ்சிப்பழமாக*
*உறுத்துமே!*

## 113. காதற்சிறப்புரைத்தல்

### பாலும்தேனும்

**குறள் 1121**

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

*பால்பற்கள் முளைத்தநிலை!*
*மழலை பேசுகின்ற*
*என்குழந்தை*
*வாயொழுகும் உமிழ்நீரோ*
*பாலும் தேனும்*
*கலந்த சுவைதரும்*
*அமுதந்தான்!*

### உயிரில் கலந்த உறவு

**குறள் 1122:**

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

*என் செல்லமே!*
*செல்ல மகளே!*
*நீயும் நானும்*
*உயிரும் உடம்பும் போல*
*பிரிக்க முடியாத*
*உறவு!*
*பிரிவுக்கு இடமே இல்லையம்மா!*

**குறள் 1123**

> கருமணி யிற்பாவாய் நீபோதாயாம் வீழும்
> திருநுதற்கு இல்லை இடம்.

*கண்ணின் மணியே!*
*லண்டனில் இருக்கும்*
*என்பேத்தியுடன்*
*நேற்று ஸ்கைப்பில்*
*பேசினேன்!*
*அவள்என்*
*கண்ணுக்குள்ளேயே*
*இருக்கா!*
*தாத்தாதாத்தான்னு*
*அப்பிடி பேசினா!*
*நீகொஞ்சம்*
*நகந்துக்குரியா?*
*அவளுக்கு கண்ல*
*இடங்கொடுக்கணும்!*

## பிரிவின் ஏக்கம்

**குறள் 1124**

> வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
> அதற்கன்னள் நீங்கும் இடத்து.

*பள்ளிக்கூட விடுமுறையில*
*இந்த தாத்தா பாட்டியோட*
*தினமும் சிரிச்சு*
*விளையாடி நேரம்போச்சு!*
*இன்னக்கி உன்ஊருக்கு*
*கெளம்புற!*
*எங்களோட இருந்தா*

*உயிர் இருக்குற மாதிரி இருக்கு!*
*ஊருக்குப் போறேன்னு*
*நெனச்சாலே*
*உயிர்போகுது*
*ஏக்கத்துல!*

## ஏக்கம்

### குறள் 1125

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

*நம்ம*
*செண்டுக்குட்டி*
*கண்ணப்பாருங்க!*
*துறுதுறுன்னு*
*சண்டபோட்ற மாதிரி*
*துள்ளுது!*
*அவகுணங்களநான்*
*மறந்தாதானே*
*நெனெக்குறதுக்கு!*
*மறக்குறதும் இல்ல!*
*அதனால*
*நெனெக்குறதும் இல்ல!*

## என்னவன்

### குறள் 1126

கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருகுவரா
நுண்ணியர் எம்காத லவர்.

*என்மடியில*
*படுத்துக்கிட்டு*

*என்னயே உத்துப்*
*பாக்குறான் என்மகன்!*
*அவன்தான் என்*
*கண்ணுக்குள்ளேயே*
*இருக்கான்!*
*நான் இமைச்சாலும்*
*என்ன விட்டுப் போகமாட்டான்!*
*என்மேலே அவனுக்கு*
*அவ்வளவுஉயிர்.*

## அக்கா தம்பி

### குறள் 1127

**கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து.**

*அம்மா!*
*எனக்குவயசு ஏழு!*
*நான்அக்கா!*
*தம்பிக்குவயசு அஞ்சு!*
*நான்பள்ளிக்கூடத்துல*
*இருந்து வந்தா*
*அவனோட விளையாடறதுல*
*நேரம்போறதே தெரியலம்மா!*
*குட்டித்தம்பி! செல்லத்தம்பி!*
*ஏங்கண்ணுக்குள்ளேய*
*இருக்கான்!*
*சரி! சரி! வா!*
*முகங்கழுவி மையெல்லாம்*
*தீட்டிக்கோ!*

*அடபோம்மா!*

*மைதீட்டுனா கண்ணுக்குள்ள*

*இருக்குறதம்பி*

*உருவம் மறஞ்சுறும்ல!*

*அதனால*

*மைதீட்டமாட்டேன்!*

**சூடான உணவா!**

**குறள் 1128**

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து.

*அம்மா*

*எனக்கெல்லாம்*

*சூடாசாப்பாடு*

*தர்ற!*

*நீமட்டும் ஆறிப்போயி*

*சாப்பிடறியே! ஏம்மா?*

*அதுவாடா செல்லம்*

*உன்னை என்னோட*

*நெஞ்சுக்குள்ள*

*பத்திரமா வச்சிருக்கேனா*

*நான்சூடா சாப்டேனா*

*அதுஉன்ன சுட்டுரும்ல!*

*அதனாலதான் நான்*

*ஆறுன சாப்பாடையே*

*சாப்புடுவேன்!*

*அதுஒருவகையான*

*பிள்ளப்பாசண்டா!*

## ஊருக்கு என்ன வேலை?

**குறள் 1129**

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்.

*என்குழந்தைக்கு*
*உடல்நிலைசரியில்ல!*
*கண்இமைக்காம*
*தூங்காமபாத்துக்குறேன்!*
*கண்இமைத்தால்எங்கே*
*கண்ணுக்குள்ளஇருக்குறவன்*
*வெளியேபோய்ருவானோன்னு*
*பயமாஇருக்கு.*
*இந்தஊருஎன்னடான்னா*
*அவன்அதசெஞ்சு*
*இதசெஞ்சு*
*இழுத்து வச்சுக்கிட்டான்!*
*அதான் பாவம்இவ*
*தூங்கக்கூட முடியலன்னு*
*அவனையே குற்றம்சொல்லுது!*
*வேற வேலயேஇல்ல!*

## ஏந்தா இப்படியோ

**குறள் 1130**

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்.

*ஏம்மா பேரன் சுற்றுலாபோயி*
*ரெண்டுநாளாச்சு!*
*என்னோட பேசலென்னு*
*நீயும் உங்கம்மாவும்*

*அக்கம்பக்கத்துல எல்லாம்*
*கேலிபண்றீங்க!*
*அவன் என்மனசுலே இருக்கான்!*
*உங்களுக்கு எங்க அதெல்லாம்*
*தெரியப்போகுது?*
*நீங்கதான்*
*பேரன் பேரன்னு*
*அலயறீங்கனு வாயமெள்றீங்க!*
*நாலுபேருக்குத் தெரியட்டும்.*

## 114. நாணுத்துறவு உரைத்தல்

**குறள் 1131**

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி.

*என்னஙக*
*குழந்தய சுத்தி*
*குடும்பமே நிக்குது!*
*ஆமா*
*உன்மகனப்பாரு!*
*சாப்பிடவே மாட்டேன்னு*
*லூட்டிஅடிக்கிறான்!*
*கேட்டா*
*அம்மா என்னை சத்தம்போடறா!*
*கண்டுக்க மாட்டேங்கிறா!*
*என்று*
*பட்டியல் போடுறான்!*
*நாலுபேருக்குத் தெரியட்டும்னு*
*சொல்றான்!*
*எல்லாருக்கும் தெரிஞ்சிருச்சு!*

*மகிழ்ச்சியா இருப்போம்!*
*சரிதானே!*

**குறள் 1132**

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து.

*தம்பி*
*மழையில நிக்காத!*
*போம்மா! அப்பிடித்தான்*
*நிப்பேன்!*
*என்ன கோபம் உனக்கு?*
*அப்பா ஏன்ஊருக்குப் போனாரு?*
*அதுதான்கோபமா இருக்கேன்!*
*தம்பி*
*அங்கபாரு*
*எல்லாரும் பாக்குறாங்க!*
*உள்ளேவா!*
*பாக்கட்டுமே!*
*எல்லாருக்கும் தெரியட்டுமே!*
*என்னோட ஏக்கம்*
*புரியட்டுமே!*
*அப்பாவ நான்பாத்தாகணும்!*

## ஆசை

**குறள் 1133**

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்.

*ஏம்ப்பா*
*தலகீழா நின்னுக்கிட்டு*
*இருக்க? என்னஆச்சு?*

*அம்புறம் என்னப்பா?*
*நானும் பொறுமயா*
*அமைதியாத்தான் இருந்தேன்!*
*மடிக்கணினி மேல*
*ஆசையா இருக்கு!*
*நம்ம வீட்ல*
*யாருமே கொடுக்க மாட்டேங்குறாங்க!*
*அதான் இப்படி*
*வெக்கத்தவிட்டு நிக்க*
*துணிஞ்சுட்டேன்!*

## அன்பின் வலிமை

**குறள் 1134**

காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

*இந்த அம்மாவ*
*நாலுகேள்வி கேக்கணும்!*
*அந்தக் கோபத்தோட*
*வீட்டுக்குள்ள போவேன்!*
*அம்மா வருவாங்க*
*அம்மாவ பாத்ததும்*
*என்னோட துணிச்சல்லாம்*
*தவிடுபொடி ஆகும்!*
*அம்மாவ கட்டிப் பிடிச்சுக்குவேன்!*
*அம்மாவின்*
*அன்பு வெள்ளத்தில்*
*எனது துணிச்சல், கோபம்*
*என்ற தோணிகள்*
*அனைத்தும் அடித்துச்*
*செல்லப்படும்!*

## வேதனை

### குறள் 1135

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.

*நான் எழுதவேண்டிய*
*பாடங்கள் நிறைய*
*இருக்கு!*
*இன்னும் அக்காவரல!*
*வந்து, சொல்லித்தந்து*
*நான் முடிக்கிறதுக்குள்ள*
*போதும் போதும்னு ஆயிரும்!*
*இந்த மாலப்பொழுதுல*
*சோதனையையும்*
*வேதனையையும்*
*அக்கா ஏந்தான்*
*தர்ராளோ!*

## அம்மா இங்கே வா! வா!

### குறள் 1136

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண்.

*இந்த அம்மாவேற*
*இன்னும் வரல!*
*நேத்து போனாங்க!*
*மாமாவ பாத்துட்டு*
*வந்துருவேன்னாங்க!*
*நானும் அப்பாவுந்தான் இருக்கோம்.!*

*எனக்கு தூக்கமேவரல!*
*அவங்க அன்பை*
*நெனச்சு நெனச்சு*
*ஏக்கமாஇருக்கு.*

## அம்மா மட்டும் எப்படி?

### குறள் 1137

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்.

*நானு ரெண்டுமூணு*

*பாடத்துல*
*குறைந்த மதிப்பெண்*
*எடுத்திருக்கேன்!*
*மனசு வருத்தந்தான்!*
*அம்மாவுக்கு வேதனையாத்தான்*
*இருக்கும்!*
*ஆனா வெளியிலே*
*காட்டவே மாட்டா!*
*எப்பிடித்தான் முடியுதோ?*

## டமாரம்

### குறள் 1138

நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்.

*அங்கபாத்தியா!*
*என்னோட அம்மாவ!*
*என்னப்பத்தி*
*அக்கம் பக்கமெல்லாம்*

*கூட்டிவச்சு*
*எம்பொண்ணு இப்படி அப்படின்னு*
*புகழ்ந்துதள்ளிருவா!*
*கேக்குறவங்கள்ளாம்*
*வியப்புக்குறியோட பாப்பாங்க!*
*அம்மாவுக்கு மறைக்கவே*
*தெரியாது!*
*மனசுல உள்ள பெருமை*
*இப்படித்தான்*
*பொதுவுல போட்டு ஒடச்சிரும்.!*

## இப்படியா அலையறது?

### குறள் 1139

அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

*என்*
*பள்ளித் தோழியிடம்*
*எழுதுகோல் கேட்டேன்!*
*அதற்காக*
*கொடுக்கமாட்டேன் போ!*
*என்று என்னிடம் கோபித்துக்கொண்டாள்1*
*இன்றோடு நான்குநாள் ஆச்சு!*
*எனக்குமட்டுந்தான் தெரியும்!*
*ஆனா இது*
*ஊர்முழுதும் தெரியனம்னு*
*இந்த மனசோ*
*வீதியிலே போயி*
*மயங்கி மயங்கி அலையுதே!*

## வேதனை

**குறள் 1140:**

யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா ஆறு.

*இந்தத் தோழிகளுக்கெல்லாம்*
*என்னதெரியும்?*
*நான் ஏன் இப்படி இருக்கேன்*
*என்றெல்லாம் தெரியுமா?*
*என்னைப் பாத்து இப்படிச்*
*சிரிக்கிறாங்க!*
*என் உயிர்த்தோழிய*
*பாத்து*
*மூணு நாளாச்சு!*
*அந்த வேதனைய*
*இவங்க அனுபவிச்சு*
*இருந்தா*
*இப்படிச் சிரிப்பாங்களா?*

# 115. அலர் அறிவுறுத்தல்

## கொடுத்து வைத்தவள்

**குறள் 1141**

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

*அங்க பாரு!*
*எனக்கும் என்தோழிக்கும்*
*உள்ள நட்பைப் பற்றி*

*இவங்கெல்லாம்*
*சாட மாடையா பேசிக்கிறாங்க!*
*இப்படிப் பேசுறதாலதான்*
*என் உயிர் எங்கிட்ட இருக்குன்னு*
*இவங்களுக்குத் தெரியாது!*
*நான் கொடுத்துவைத்தவள்தான்!*
*நட்புப் பாலம்.*

**குறள் 1142**

மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர்.

*அவளோ*
*ஐந்தாவது படிக்கிறா!*
*எல்லா திருக்குறளும்*
*சொல்வாளாம்!*
*நானோ*
*ஆறாவது படிக்கிறேன்! எனக்கும் தெரியும்!*
*போட்டிக்கெல்லாம் போகும்போது*
*நட்புத்தோழியா இருந்தா நல்லதுதான்!*
*அவளோட நட்பு வேண்டும்னு*
*மனசு தவிக்குது!*
*கூடவந்த தோழிகளோ*
*உன்னப்பாக்குறா*
*உன்னப்பாத்துச் சிரிக்கிறா*
*உன்னைப்போலவே குறள் சொல்லுவா*
*என்று அடிக்கடி சொல்லி*
*எங்களுக்குள்ள நட்பை*
*உண்டாக்கி வச்சுட்டாங்க!*
*இதுவும் நல்லதுதான்!*

**குறள் 1143:**

உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

*ஐந்தாம் வகுப்பில் இருந்தே*
*கவிதைன்ற பேரிலே ஏதோ*
*கிறுக்கிக்கிட்டே இருப்பேன்!*
*எல்லாருகிட்டயும்*
*காட்டுவேன்!*
*இப்ப எட்டாவது வந்தாச்சு!*
*பள்ளிக்கூடத்துல*
*பாரதியார் நினைவுநாள்*
*கவிதைப்போட்டி வருது!*
*அறிக்கைப்பலகை*
*பாத்தப்போ*
*தோழிகள்ளாம்*
*அடியே! கவிதாயினி!*
*போட்டில கலந்துக்கன்னாங்க!*
*என்னுடைய தாழ்வுமனப்பான்மை*
*அங்கிருந்து ஓடிப்போயிட்டேன்!*
*அவங்க எல்லாரும்.*
*ஆசிரியைக் கிட்டசொல்லி*
*பேரைச்சேத்துட்டாங்க!*
*எப்படியோஆசை*
*கனிஞ்சிருச்சு!*
*எனக்கும்*
*மனசுக்குள்ள மகிழ்ச்சிதான்!*
*நல்லாபேசட்டும்!*

### குறள் 1144

கவ்வையால் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

*எங்கவீட்ல எல்லாம்*
*பிள்ளை இல்லையாக்கும்!*
*என்னமோ ஓவியமா*
*பிள்ளய வளக்குறாளாம்!*
*ஆறாவது படிக்குறா*
*ஊட்டிஊட்டி*
*பாசத்த கொட்டுறா!*
*எங்கம்மா! எங்கவீடு!*
*இவங்களுக்கென்ன?*
*இவங்க இப்படிப்*
*பேசுறதுனால*
*அம்மா பிள்ள அன்பு*
*நல்லாவளருது!*
*அன்புப்பயிர் வளர*
*ஊத்துற தண்ணிதான்*
*இவங்கபேச்சு!*
*பேசட்டும் பேசட்டும்!*
*இல்லனா வாடிப்போயிடும்!*

## மயக்கம்

### குறள் 1145

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது.

*தாயின்*
*அரவணைப்பில்*
*தளிர்மகள் நானோ*
*தழுவிக் கண்ணயர்வேன்!*

*தாயன்பு*
*வெளிப்பட வெளிப்பட*
*மலர்த்தேனை உண்ண உண்ண*
*மயங்கும்*
*வண்டுபோல மயங்குகிறேன்!*
*களங்கமற்ற*
*தாயன்பிற்கு ஈடுண்டோ?*
*ஊர்வாய்.*

**குறள் 1146**

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

*நான் எட்டாவது படிக்கிறேன்!*
*எங்கவீட்டுத் திண்ணையிலே*
*உட்கார்ந்திருந்தேன்! இருந்திருந்து*
*அன்றுதான் ஒருவாய் சோறை*
*ஊட்டிவிட்டார் எங்க அப்பா!*
*தெருவுல போறவங்க எல்லாம்*
*ஏதோ*
*நிலாவை பாம்பு*
*விழுங்குனமாதிரி*
*பாத்துட்டு போறாங்க!*
*பேசிக்கிட்டே போறாங்க!*

**நட்புவளர**

**குறள் 1147**

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

*என்தோழி விளையாட்டில் கெட்டி!*
*நான் படிப்பில் கெட்டி!*

*அவளுடைய*
*விளையாட்டுப்*
*போட்டிகளைப் பார்க்கச்*
*செல்வதுதப்பாம்!*
*நான் அவளுடன் சேர்ந்தால்*
*நான் படிக்க மாட்டேனாம்!*
*ஊராரும் சொல்கின்றார்!*
*அம்மாவும் சொல்கின்றாள்!*
*ஆனால் ஊரார் சொல் எருவாக*
*அன்னையின் சொல்நீராக*
*எங்கள் நட்புப்பயிர்*
*செழித்து வளர்கிறது.*

## தூண்டுகின்றனர்

**குறள் 1148**

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

*ஏம்மா*
*எப்பப் பாத்தாலும்*
*கவிதை எழுதிக்கிட்டே*
*இருக்கியே*
*இதுவா சோறுபோடப் போகுது?*
*படிச்சுமுடிச்சு வேலக்குப்போயி*
*உருப்படற வழியப்பாரும்மா!*
*என்னுடைய தமிழாசிரியை*
*என்கவிதைய மேற்கோள்*
*காட்டுற அளவுக்கு வந்திருக்கேன்னு*
*சொன்னாலும் புரியாது!*
*ஊரார் சொல்றதெல்லாம்*

நெய்ய ஊத்திநெருப்பை
அணைக்கிற மாதிரி!
கவிதை ஆற்றலை
தடுக்கப் பாக்குறாங்க!
இதையெல்லாம் மீறித்தான்
ஆற்றல் வளருது!
எனக்குவருத்தமில்ல!

## குறள் 1149

**அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்பு என்றார்**
**பலர்நாண நீத்தக் கடை..**

போகமாட்டேன்
போகமாட்டேன்னு
திடீர்னு இப்படி கிளம்பிட்டீங்களே
தாத்தா!
செல்லம் கோவிச்சுக்காதே!
ரெண்டுநாள்ல வந்துடறேன்!
சரியா!
என்னமோ சொன்ன!
உங்க தாத்தா உன்னவிட்டு
எங்கேயும் போகமாட்டாங்கன்னு!
தோழிங்க தொல்லதாங்கல!
எல்லோரும் சிரிக்கிறமாதிரி
செஞ்சுட்டு போயிட்டாரு!
இதனாலஎன்ன?
இவங்க கேலிசெய்றாங்கனு
நான்ஏன் வருத்தப்படணும்?
தேவையேஇல்ல.

**ஏற்பாள்!**

**குறள் 1150**

தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும் இவ்வூர்.

*என்நட்புத் தோழியின்*
*பிறந்தநாளுக்கு*
*நான்போகலேன்னு*
*ஒரேயடியா கோவிச்சுக்கிட்டா!*
*மனசொடிஞ்சு போயிட்டேன்!*
*வகுப்பு முழுவதும்*
*அவளப்பத்திதான் பேச்சு!*
*அது அவளுக்குத்*
*தெரிஞ்சா*
*என்னோட மறுபடியும்*
*பேசுவா!*
*என்னய நட்புத்தோழியா*
*ஏத்துக்குவா!*

## 116. பிரிவாற்றாமை

### சொல்லாதே!

**குறள் 1151**

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

*அத்தை!*
*கார்குழலி இருக்காளா?*
*கார்குழலி! கயல்விழி*
*வந்திருக்காபாரு!*

*கார்குழலி!*
*ஏன் அழுகிறாய்?*
*நான்வெளிநாடு*
*போகிறேன்!*
*திரும்பிவர*
*ஆறாண்டுகள் ஆகும்!*
*என்றுசொல்லத்தானே*
*வந்தாய்!*
*என்னுடன் இருப்பதென்றால் சொல்!*
*இல்லை*
*நீ திரும்பிவரும்போது*
*எவளிருப்பாளோ*
*அவளிடம் சொல்லிவிட்டுச்செல்!*
*அப்பா என்ன கோபம்உனக்கு!*
*என்சூழ்நிலை அப்படி!*
*அப்பாவுக்கு மாறுதல்*
*ஆகிவிட்டது!*
*புரிந்துகொள்.*

## பிரிவின் அச்சம்

**குறள் 1152**

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு.

*எனது தந்தை*
*எல்லைப்பகுதி இராணுவத்தில்*
*தாய்நாடு காக்கும் வீரர்!*
*ஒருமாத விடுப்பில் வந்தார்!*
*நாள்கள் பறந்துவிட்டன!*
*பார்த்துப் பார்த்து பெருமை கொண்டேன்!*
*இதோ கட்டிப்பிடித்துப்*

*படுத்துக்கொண்டிருக்கிறேன்!*
*விடுப்புமுடிகிறது!*
*புறப்பட்டு விடுவார்*
*பெருமையான பிரிவுதான்!*
*இந்த அன்பான அணைப்பும்*
*அச்சம் தருகிறதே! பிரிவின்*
*ஏக்கம் இதயத்தைப் பிழிகிறதே!*

*இந்தப் பதில் எனது கவிதைக்கு திருமதி புளோரா ராஜா அனுப்பியது. இவர் கணவர் ராஜா ராணுவத்தில் பணி புரிகின்றார். எங்கள் குடும்ப நண்பர் தமிழாசிரியை, விழுப்புரம்.*

*“எங்கள் ராணுவக் குடும்பங்களின் மனநிலையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது உங்கள் வார்த்தைகள் ஐயா. இந்நிகழ்வை நேரில் காணும்போது மிகவும் நெகிழ்ச்சியாக இருக்கும்.*

*அதற்கேற்றாற்போல் தங்கள் மனநிலையை மாற்றிக்கொள்வது பிரமிப்பாக இருக்கும்.உதாரணமாக என் மகளும், மகனும் அடிக்கடி கூறுவது “அப்பா! லீவுக்கு வரும்போது அந்த அழகான இடத்திற்குப் போகலாம்! அந்த அழகான பொருளை அப்பா வாங்கிக்கலாம்!” அதிகம்அடம்பிடிப்பதில்லை நான். வியந்த வினாடிகள் வைரங்கள் தமிழரே!*

*உங்கள் வார்த்தைகள் ராணுவ வீரர்களைப் பெருமை கொள்ள வைக்கிறது. நன்றிகள் பல.”*

## எப்படி நம்புவது?

### குறள் 1153

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோர் இடத்துண்மை யான்.

*அம்மா!*
*அப்பாஎங்கே? போயிட்டாரா?*

*ஆமாம்மா! ஏதோ அவசரம்னு*
*இப்பத்தான்போனார்!*
*இல்லம்மா*
*நானும் கடைக்குவரேன்னு*
*சொல்லியிருந்தேன்!*
*என்தோழிக்கு பிறந்தநாள்*
*பரிசுவாங்கனும்னு சொல்லியிருந்தேன்!*
*என்னவிட்டுட்டுப் போனா வருத்தப்படுவேன்னு*
*தெரிஞ்சும் போயிட்டாரும்மா!*
*சொன்னசொல்ல மறந்துட்டு*
*போறாரே!*
*நான் எப்படி நம்புறது?*

## நம்பியது குற்றமா?

### குறள் 1154

அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு.

*அம்மா*
*நாங்கசில்லாக்கு*
*விளையாடினோம்!*
*தம்பியும் வரேன்னாம்மா!*
*கோவிக்கமாட்டேனு சொன்னான்!*
*சரின்னு சேத்துக்கிட்டேம்மா!*
*ஆனா*
*முணுக்குனு கோவிச்சுக்கிட்டு*
*போயிட்டாம்மா!*
*நம்பினேன்!*
*அவம்பாட்டுக்கு போயிட்டான்!*
*எம்மேலகுற்றமா?*

## ஏன் போனாரு?

### குறள் 1155

ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு.

*அம்மா!*
*அப்பா என்னை*
*அழஅழ விட்டுட்டுப்*
*போயிட்டாருல்ல!*
*அப்புறம் எப்படிம்மா*
*திரும்பிவந்து*
*எங்கிட்ட அன்பா*
*இருக்கமுடியும்?*
*அவர் போகாம*
*இருந்திருக்கணும்!*

## கல்லுக்குள் ஈரமா?

### குறள் 1156

பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை.

*அப்பா*
*இந்த அண்ணன்*
*என்னோட பத்துநாள்*
*இங்க இருந்தாரு!*
*பொழுதுபோனதே*
*தெரியல!*
*இன்னக்கி ஒருநாள்*
*இருந்துட்டு நாளக்கி*
*போகலாம்னு சொன்னேம்பா!*
*நான்வெளிய போயிட்டு*

*வர்ரதுக்குள்ள*
*கிளம்பி போயிட்டாரு!*
*ரொம்பகல் நெஞ்சம்பா!*
*அடுத்ததடவ வந்து*
*இப்படித் தங்குவாருன்ற*
*ஆசையெல்லாம்*
*நிராசைதான்!*

## வளையலும் பேசுமோ?

**குறள் 1157**

துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

*அப்பாவுக்கு*
*கணக்குத் தணிக்கைவேலை!*
*ஊர்ஊரா போயிட்டு வருவாரு!*
*கூட இருந்தவரைக்கும்*
*சிரிப்பும் கும்மாளமுந்தான்!*
*அடுத்தஊருக்குப் போயிட்டாரு!*
*ஒருவாரம்ஆயிருச்சு!*
*ஒருமாசம் கழிச்சுதான்*
*வருவாரு!*
*தூக்கமேவரல!*
*சாப்பிடப்பிடிக்கல!*
*அவரநெனச்சு*
*மனசுவாடிப்போச்சு!*
*உடல்மெலிஞ்சுபோச்சு!*
*எனக்கென்னமோ*
*அப்பாமேல அவ்வளவு உயிர்!*
*வளையல்கூட கழண்டு விழுந்து*
*என்னோட ஏக்கத்தை*
*காட்டிக்கொடுத்துருமோ?*

## நினைவே துன்பம்

### குறள் 1158

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு.

*இந்த*
*ஆண்டில் இருந்து*
*புதுப்பள்ளிக்கூடம்!*
*எல்லாம் புதுசாஇருக்கு!*
*எப்படிப் பழகுவாங்களோ*
*தெரியல!*
*யாரப்பாத்தாலும்*
*அன்னியராவே தெரியுது!*
*இந்தச் சூழ்நிலையே*
*துன்பம்தருது!*
*என்னோட அண்ணன், தம்பி*
*எல்லாம் அங்கேயே படிக்கிறாங்க!*
*அவங்கள பிரிஞ்சு*
*இங்கபடிக்கிற*
*நெனப்பு*
*இதைவிடதுன்பமாஇருக்கே!*

## வியப்புத் தீ!

### குறள் 1159

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

*அப்பா!*
*பள்ளிக்கூடத்துல*
*என்பக்கத்திலேயே*

*என்நட்புத் தோழி*
*இருக்காப்பா !*
*வகுப்புல இருக்குறவரைக்கும்*
*மனசு குளிர்ந்து இருக்குப்பா !*
*ஆனா*
*அவள பிரிஞ்சு*
*வீட்டுக்குவந்துட்டா*
*சூடா இருக்குறமாதிரி*
*தோணுதுப்பா !*
*நட்புத்தீ இப்படித்தான்*
*இருக்குமாப்பா ?*
*ஆமாம்மா*
*இது நெருங்குனா குளிரும் !*
*விலகுனாசுடும் !*

## இப்படியும் இருக்கின்றார் !

**குறள் 1160**

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.

*மாணிக்கம் !*
*என்னம்மா !*
*சிங்கப்பூருக்குப்போயி*
*நீங்க எத்தனபேரு*
*விருது வாங்குறீங்க ?*
*இருபது பேரும்மா !*
*சரிசரி, மகிழ்ச்சியா*
*போயிட்டுவாங்க !*
*எல்லாம் தெரியுது*
*இருந்தாலும்*

*இதுவரைக்கும் உன்னப்*
*பிரிஞ்சதில்லியா*
*அதான்மனசு கலங்குது!*
*நீவரவரைக்கும் பொறுமையா*
*காத்திருக்கேன்!*
*என்னமாதிரி*
*பலபேரு*
*இங்கஇருக்காங்கல!*

## 117. படர்மெலிந்திரங்கல்

**ஊறுமோ!**

**குறள் 1161**

மறைப்பேன் மன்யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.

*ஒருநாள்*
*வீட்டுப்பாடம் செய்யலேனு*
*அம்மா என்னை*
*திட்டுதிட்டுதிட்டுனு*
*திட்டிட்டா!*
*போம்மானு நானும்*
*கோவிச்சுக்கிட்டேன்!*
*இத மத்தவங்களுக்கு*
*மறைக்கணும்னு நெனக்கிறேன்!*
*ஆனால் அதுவோ*
*இறைக்க இறைக்க ஊறும்*
*ஊற்றுநீர் மாதிரி பெருகுது!*
*நம்ம அம்மாதானேனு*
*பக்கத்துல நின்று சிரித்தேன்!*

*ரெண்டுபேரும் சேந்து சிரிச்சிட்டோம்!*

*அந்த அன்புக்கு ஈடாகுமா?*

## ஊசலாட்டம்!

### குறள் 1162

**கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு**
**உரைத்தலும் நாணுத் தரும்.**

*அம்மா!*
*என்வகுப்புத் தோழி*
*பாவையைக் காட்டிலும்*
*சென்ற பருவத்தேர்வில்*
*நான் அதிக மதிப்பெண்*
*வாங்கினேன்!*
*அப்பவே அவ சவால் விட்டாம்மா!*
*நானும் இந்தத் தேர்விலே*
*அவளைக் காட்டிலும்*
*பத்து மதிப்பெண்*
*குறைவா வாங்கிட்டேன்!*
*அதை மறைக்கவும் முடியல்ல!*
*அவகிட்ட தோல்வியச்சொல்ல*
*வெக்கமாவும் இருக்கும்மா!*

## காவடி

### குறள் 1163

**காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்**
**நோனா உடம்பின் அகத்து.**

*அப்பா!*
*வர்ர பத்தாம்தேதி*
*எனக்குப் பிறந்தநாள்!*

*சிறப்பா கொண்டாட*
*ஏற்பாடு செய்றீங்க!*
*அதே நாள்ல*
*பள்ளிக்கூடத்துல*
*இன்பச் சுற்றுலா போறாங்க!*
*அதுக்கு*
*வரமாட்டேனு சொல்ல*
*நட்புதடுக்குது!*
*பிறந்தநாள் கொண்டாட*
*மனசுதவிக்குது!*
*காவடிபோல*
*ரெண்டுபக்கமும்*
*ஊசலாடுதுப்பா!*

## தோணி எங்கே?

**குறள் 1164**

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

*பக்கத்து வீட்டுக்கு*
*புதுசா குடிவந்திருக்காங்க!*
*மூணாவது படிக்கிற*
*பொண்ணு ஒன்னு இருக்கு!*
*அவளோட பழகலாம்னு*
*நெருங்கிப்போனா*
*விலகிவிலகிப் போறா!*
*ஆனா ஏம்மனசோ ஏங்குது!*
*நட்பு கடலலை போல சூழ்ந்து*
*வருதே!*
*இதை நீந்திக் கடப்பதற்குத்*
*தோணியும் இல்லையே!*

## நட்பிற்கடிமை

**குறள் 1165:**

> துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு
> நட்பினுள் ஆற்று பவர்.

*அம்மா !*
*பள்ளிக்கூடத்துல*
*என்னோடவே*
*இருக்குற*
*அமுதா,*
*பள்ளிக்கூடம்விட்டு*
*வெளியவரும்போது*
*இன்னொருத்தியோட*
*போறாம்மா !*
*உயிருக்குயிரா*
*நட்புல இருக்கும்போதே*
*இப்படிப் பிரிஞ்சி□ப்*
*போறாளே*
*இவ்ளாம் பகையாளியா*
*இருந்தா என்னசெய்வாளோ !*
*தெரியலம்மா !*

## இன்பமும் துன்பமும்

**குறள் 1166:**

> இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
> துன்பம் அதனிற் பெரிது.

*அக்கா !*
*பள்ளிக்கூடத்துல*
*தோழிகளோட*

*பேசிப்பழகி*
*விளையாடி இருக்குறவரைக்கும்*
*மகிழ்ச்சியும்*
*சிரிப்பும்*
*கடல்போல கரைபுரளுது!*
*பிரிஞ்சு*
*வீட்டுக்கு வந்தா*
*இந்தமனசு*
*துன்பத்துல வாடித்*
*துடிக்கிறதும் கடலளவு இருக்குதே.*

## தவிப்பு

**குறள் 1167:**

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

*அம்மா*
*திடீர்னுமயக்கம்*
*போட்டாங்க!*
*மருத்துவமனையில*
*அப்பா*
*அம்மாவோட இருக்காரு!*
*தாத்தா பாட்டி*
*என்ன பாத்துக்குறாங்க!*
*அம்மாவுடைய*
*அன்புக் கடல்ல*
*நீந்தி இன்னும்*
*கரைசேரல!*
*இந்த நள்ளிரவில்கூட*
*தனிமை உணர்ச்சில*
*தவிச்சுக்கிட்டிருக்கேன்!*

## துணை

### குறள் 1168

மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை.

*இரவே! இரவே!*
*உன்னைப் பார்த்தால்*
*பாவமாக இருக்கிறது!*
*உலகத்தையே*
*உறங்கச் செய்துவிட்டு*
*என்னைத் தவிர உனக்கு*
*வேறுதுணை இல்லாமல்*
*இருக்கின்றாய்! நீ.*

## கொடுமை!

### குறள் 1169

கொடியார் கொடுமையின் தாம்கொடிய விந்நாள்
நெடிய கழியும் இரா.

*ஊருக்குப்போன*
*அப்பா*
*நாளை காலை*
*வந்திடுவார்!*
*இந்த இரவோ*
*மெல்ல மெல்ல*
*அன்னநடை போட்டு*
*நகர்கிறது!*
*இதுகழியும் கொடுமை*
*இருக்கிறதே*
*அப்பா தந்த*

*ஏக்கத்தை விட*
*பெருங்கொடுமையாய்*
*உள்ளது.*

### கண்கள் பாவம்

**குறள் 1170**

உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்.

*அம்மாடி!*
*வாசல்ல ஏன் உட்காந்திருக்கே?*
*உள்ளவா!*
*பாட்டி வராங்களான்னு*
*பாக்குறேம்மா!*
*வருவாங்க! வருவாங்க!*
*உள்ளவா!*
*இல்லம்மா தாமதமாகுதா!*
*கண்ல இருந்து தானாக*
*கண்ணீர் வழியுதம்மா!*
*இந்த மனசு மாதிரி வேகமாக போக*
*கண்களால முடியலே!*
*அதான் அழுதுகிட்டே இருக்கு!*

## 118. கண்விதுப்பழிதல்

### யார் குற்றம்?

**குறள் 1171**

கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது.

*அக்கா அக்கா!*
*பக்கத்துவீட்டு*
*பாமா*
*எனக்கு நல்லதோழிதான்!*
*ஆனா*
*அவங்க அப்பா*
*ஒரிசாவுக்கு மாறுதலானதாலே*
*எல்லோரும் அங்கே*
*போயிட்டாங்க!*
*இந்தக் கண்ணுதானே*
*முதல்ல பாத்துநட்பை*
*ஏற்படுத்தியது*
*அதோட குற்றம்!*
*இப்பவந்து*
*பாமாவை*
*காட்டு காட்டுன்னு*
*அடம்பிடிச்சு அழுதா*
*என்ன பண்றது?*
*எனக்கு அதவிட வேதனை!*

## கண்களின்தவிப்பு

### குறள் 1172

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்.

*நாம் பாட்டுக்கு தோட்டத்துல*
*பூப்பறிச்சுக்கிட்டு*
*இருந்தேன்!*
*அப்ப அந்தச் சுவருக்கப்பால*
*ஒருசிறுமி குதிச்சுக் குதிச்சு*

*ஓடுச்சு!*
*இந்தக் கண்ணு சும்மாஇருக்கணும்ல! பாத்துருச்சு!*
*வாய் கூப்பிட்டுச்சு!*
*முகமோ சிரிச்சுச்சு!*
*பேசினோம், பழகினோம்!*
*நட்பு மலர்ந்துச்சு!*
*ஒருவாரம் போனதே தெரியல!*
*ஊரில் இருந்து அத்தை*
*வீட்டுக்கு வந்து தங்கி*
*காலையில நான் என்வீட்டுக்கு வந்துட்டேன்!*
*அடுத்தநாள் கண்ணு பரபரன்னுது! தேடுது!*
*என்ன நடக்கும்னு தெரியாம*
*கண்ணிருக்கே நட்பை உண்டாக்கிரும்!*
*தன்னாலதான்னு உணராம*
*தவிக்க ஆரம்பிச்சுரும்!*

## கண்களே நியாயமா?

### குறள் 1173

கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து.

*தேர்த்திருவிழா*
*பார்க்கப் போயிருந்தேன்!*
*பஞ்சுமிட்டாய்*
*வாங்குற இடத்துல*
*பழைய தோழிய*
*இந்தக் கண்ணு*
*பாக்கவச்சுச்சு!*
*சிலஆண்டுகளுக்கு*
*முன்னால்*
*அவ்வளவு நெருக்கமா*

*இருந்தோம்!*
*இப்ப அவளே*
*பாத்தும் பாக்காத*
*மாதிரி போயிட்டா!*
*மனசு கனமாயிருச்சு!*
*எந்தக் கண்கள்*
*பாக்கவச்சதோ*
*அதேகண்கள்*
*அழத் தொடங்குது!*
*இது நகைப்புக்குரியது தானே!*

## கண்களும் வறண்டதே

### குறள் 1174

பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து.

*கண்மணி!*
*ஏம்மா சோகமா*
*வாசல்ல உக்காந்திருக்க?*
*பொன்மணி!*
*எங்க தாத்தா*
*நேத்து தூங்கிட்டே*
*போனாரு!*
*இன்னும் வரல!*
*அப்படி நல்லா என்னோட*
*பழகுவாரு கொஞ்சுவாரு!*
*இந்தக்கண்கள்தான்*
*காரணம் அதுக்கு!*
*அதான் இந்த் பக்கமா*
*பாத்துக்கிட்டே இருக்கேன்!*

*ஏக்கத்துல*
*கண்கள்கூட அழமுடியாத*
*அளவுக்கு*
*வறண்டுபோச்சு!*

## அதே கண்கள்!

### குறள் 1175

படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.

*பள்ளியில் முதல்நாள்!*
*புதுப்புது மாணவிகள்*
*சேர்ந்திருந்தனர்!*
*யார்யாரோ வந்தாலும்*
*என்கவனத்தை ஈர்த்ததோ*
*பாமதிதான்!*
*கண்களுக்கு நன்றி சொன்னேன்!*
*தோழியாகி*
*உயிர்த்தோழியானோம்!*
*அடுத்தநாள்*
*பார்க்கவேண்டும் என்ற*
*துடிப்பில்*
*எந்தக்கண்கள்*
*நட்பைப் படரவிட்டதோ*
*அதேகண்கள்*
*தூக்கமிழந்து வாடுகின்றன.*

### குறள் 1176

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

*பூவிழி*
*என்னோட டூவிட்டு*
*ரெண்டுநாளாச்சு!*
*பாத்தும் பாக்காத*
*மாதிரி முகத்த*
*திருப்பிக்கிட்டு போறா!*
*இந்த ஏக்கத்துக்குக்*
*காரணமான*
*கண்களும்*
*வாடிவதங்குது!*
*அதுவரைக்கும்*
*எனக்கும் மகிழ்ச்சிதான்!*

## துவண்டு போங்கள்!

**குறள் 1177**

உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்.

*என் அண்ணன்*
*புறப்பட்டு கல்லூரி*
*விடுதிக்குச் சென்றுவிட்டான்!*
*வீட்டில் இருந்தவரைக்கும்*
*பக்கத்துல போயி*
*குழைந்து குழைந்து*
*பேசி வம்பிழுத்து*
*லூட்டி அடிக்கவச்ச*
*கண்களே!*
*இப்ப அவன் பிரிவை*
*நெனச்சு*
*தூங்காமலும்*

*கண்ணீர்த்துளிகள்*
*வற்றும்அளவுக்கும்*
*துன்பத்துல*
*நல்லாதுடிச்சுத்*
*துவண்டுபோங்க.*

## அமைதி இல்லை!

### குறள் 1178

பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண்.

*இதோ*
*அடுத்த தெருவில்தான்*
*இருக்கின்றாள்!*
*என் வகுப்புத்தோழிதான்!*
*நெருக்கமான நட்புதான்!*
*இன்று விடுமுறைதான்!*
*ஒருநடைவந்து*
*பார்த்து போகலாமல்லவா!*
*அந்தநினைப்பே வராது!*
*பெரியஇவ!*
*அவளபாக்காம என்கண்களுக்கு*
*அமைதியேஇல்லை!*

## தூக்கம் அவ்வளவுதான்!

### குறள் 1179:

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.

*எங்க அப்பாவுக்கு*
*மருந்து முகவர்பணி!*

*இன்று வந்திருக்கார்!*
*நான்குநாள் இருப்பார்!*
*மாறிமாறி ஊர்ப்பயண*
*வேலைதான்!*
*இதோ படுக்கப்போறோம்!*
*அப்பா பக்கத்துலதான்*
*நான்படுப்பேன்!*
*அவரு வரலனு சரியா*
*கண்கள் தூங்காது!*
*வந்துட்டார்ல*
*மறுபடியும் எப்ப போவாரோன்னு*
*கண்கள் தூங்காது!*
*அப்பாவின்*
*அன்புக்காக ஏங்கும்*
*கண்களேஇப்படித்தான்!*

## டமாரம்

### குறள் 1180

மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.

*எனக்கு*
*தமிழ் ஆசிரியைனா*
*ரொம்ப பிடிக்கும்.*
*அவங்க இலக்கியக்காட்சிகளை*
*சொன்னா நம்ம கண்முன்னால*
*நடக்குறமாதிரி இருக்கும்!*
*அவங்க ரெண்டுநாள்*
*விடுப்பாம்!*
*எனக்கு என்னமோ மாதிரி இருக்கு!*

*இந்தோ வந்துட்டாளுக தோழிகள்!*
*ஏண்டி மரத்தடியில*
*உக்காந்திருக்க?*
*முகமெல்லாம் ஒருமாதிரிஇருக்கு!*
*கண்கள் கலங்கியிருக்கு!*
*என்மனச காட்டிக்கொடுக்க*
*கண்களே இருக்குறப்ப*
*நான் மறைக்கிறத*
*தெரிஞ்சுக்குறது*
*மத்தவங்களுக்கு கடினமில்லை!*

## 119. பசப்புறு பருவரல்

### யாரிடம் சொல்ல?

**குறள் 1181**

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க்கு ரைக்கோ பிற.

*என் தந்தை*
*வெளிநாடு சென்று*
*ஐந்தாண்டு காலம்*
*பணிசெய்து விட்டு*
*திரும்பிவந்து விடுவாராம்.*
*அம்மாவும்ம னசின்றி*
*தலையாட்டுவது*
*புரிகிறது!*
*நானும் சரியென்றேன்!*
*நேற்றிரவு விமானப்பயணம்!*
*இன்று வெளிநாடு!*

*பணிக்களத்தில் அவர்!*
*அப்பாவின் ஏக்கம்*
*மனதைப்பிழிகிறது!*
*அழுகை அழுகையாக வருகிறது!*
*உருகி உருக்குலைவதை*
*யாரிடம் சொல்லமுடியும்?*

## உனக்குப்பெருமையாக்கும்!

**குறள் 1182**

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.

*அரைகுறையா தூங்கி*
*முழிச்சுக் கண்ணாடி முன்னாலே*
*நின்னு என்னைப் பார்த்தேன்!*
*என்ன மீத்தேன் பாதிச்சநெலம்மாதிரி*
*நெறம்மாறித் தெரியுது!*
*ஓ! என்னை விரும்பும்*
*உயிர்த்தோழி*
*ஊரில் இருந்து இன்னும்வரல!*
*அந்தப்பிரிவு உண்டாக்கிய*
*ஏக்கம் பெருமிதத்தோட படர்ந்திருக்கு.*

## எடுத்ததும் கொடுத்ததும்

**குறள் 1183**

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.

*அம்மா கவிதா!*
*வழக்கமானஉன்னுடைய*
*கலகலப்புஎங்கே?*

*அழகான புன்னகை எங்கே?*
*ஏ வாடிப் போயி இருக்குற?*
*அதுவா!*
*என் தம்பியோட*
*ஒரே வம்பிழுத்துக்கிட்டே*
*இருப்பேன்!*
*அவன் ஊருக்குப்போயி*
*நாலு நாளாச்சு!*
*கலகலப்பையும் சிரிப்பையும்*
*எடுத்துக்கிட்டு போயிட்டான்!*
*வாட்டத்தையும் சோகத்தையும்*
*எனக்குக் கொடுத்துட்டு*
*போயிட்டாண்டி*
*தமிழரசி!*

## எப்படி இப்படி

### குறள் 1184

உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு.

*குமுதா!*
*எங்கபாட்டி*
*எங்கவீட்ல ஒருமாதம்*
*எங்கபெரியப்பா வீட்ல*
*ஒருமாதம் இருப்பாங்க!*
*முந்தாநாள் கிளம்பிபோயிட்டாங்க!*
*அவங்களபத்தி நல்லதுதான் பேசுறேன்!*
*நல்லபடியாத்தான் நெனக்கிறேன்!*
*ஆனாலும் இந்தப்பிரிவுத் துயரம்*
*எப்படியோ வந்து ஒட்டிக்குச்சு!*

## இப்படியா படர்வது?

### குறள் 1185

உவக்காணெம் காதலர் செல்வார் இவக்காணென்
மேனி பசப்பூர் வது

*என்ன*
*என்னயே பாக்குறீங்க!*
*உடல் சோர்வாஇருக்குற*
*மாதிரி இருக்குல!*
*எனக்கும் அப்படித்தான்*
*தோணுது!*
*என் உயிர்த்தோழி*
*வளர்மதிய*
*அவ ஊருக்குப்போற*
*பேருந்துல ஏத்திவிட்டோம்!*
*அந்தப் பேருந்து*
*கொஞ்சதூரங்கூட*
*போகல*
*மனசுல ஏக்கம் பரவி*
*உடலுக்குச் சோர்வைக்*
*கொடுத்துருச்சு!*
*என்னசெய்ய!*
*பொறுத்துக்குருவோம்!*

## எப்படானு காத்திருக்கு!

### குறள் 1186

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

*தோழி கலையும் நானும்*
*தேர்வுக்கு சேந்து படிக்கிறோம்!*

*அவசொல்ல நான்சொல்ல*
*பயமேஇல்லாம படிக்கிறோம்!*
*அவ எந்திரிச்சு போனஉடனே*
*விளக்கொளி விலகியதும்*
*உடனே இருள்சூழ்ற*
*மாதிரி ஏக்கத்தோட*
*என் உடம்புலபயமும்*
*படர்ந்துருது!*

## தள்ளிப்படுத்தா அள்ளிக்குது!

### குறள் 1187

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு

*தாத்தாவைக்*
*கட்டிப்பிடித்துத் தூங்குற*
*பேத்திநான்.*
*விடியல் பொழுதில்*
*கொஞ்சம் தள்ளிப்படுத்தேன்!*
*முழிச்சுப் பாத்தா*
*தாத்தா நடைப்பயிற்சிக்குப்*
*போயிட்டாரு!*
*அவ்வளவுதான்*
*மனசு வாடிப்போச்சு!*
*கொஞ்சம் தள்ளிப்படுத்தா*
*போதுமே! ஏக்கம்ஒட்டிக்குரும்!*

## நானா காரணம்?

### குறள் 1188

பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்.

*என்னப்பாத்து*
*வாடிப்போயிட்ட*
*வதங்கிப்போயிட்டனு*
*சொல்றாங்க!*
*ஆனா*
*இதுக்குக் காரணமான*
*என்பாட்டியபத்தி*
*யாருமே சொல்லமாட்டேங்குறாங்க!*
*கடைக்கு போயிட்டுவரேன்னு*
*சொல்லிட்டு ஊருக்குப்*
*போயி ரெண்டுநாளாச்சு!*
*அந்தக் கோவந்தான்*
*இப்படி ஆக்கிடுச்சு!*
*ஊருக்குவேலயே இல்ல.*

**ஏக்கம்தொடரட்டும்**

**குறள் 1189**

பசக்கமன் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின்.

*எனக்கு*
*முழுஆண்டுத் தேர்வு!*
*நாளை மறுநாள்தேர்வு!*
*மாமாவீட்ல படி!*
*நாளைக்கு வந்துருவோம்னு*
*சொல்லி விட்டுட்டு*
*ஆறுதல் கூறிஊருக்கு போயிட்டாங்க!*
*ஏக்கத்துல சிணுங்கிச்சிணுங்கி*
*அழறேன்!*
*இப்படிச் செஞ்சவங்க*
*நலமா இருப்பாங்கணா*

*என்மீது ஏக்கம்தொடர்ந்து*
*படரட்டும்!*

## இதையும் தாங்குவேன்

**குறள் 1190**

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.

*என் தோழி துளசி*
*பூங்காவுக்கு வரச்சொன்னா!*
*வந்தேன்! ஆனால்*
*இவ்வளவு நேரமாகியும்*
*வரல!*
*அவளுக்கு என்ன அவசரமோ*
*தெரியல!*
*அவள என்மேல்*
*அன்பில்லாதவள்*
*என்று சொல்ல*
*மாட்டாங்கனா*
*நான் ஏக்கம் சுமப்பவள்*
*என்று பெயரெடுக்குறதும்*
*நல்லதுதான்.*

# 120. தனிப்படர்மிகுதி

**குறள் 1191**

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

*எங்க வீட்டுக்கு எதிர்வீட்டில்*
*ஐந்தாவது படிக்கும் அரசி இருக்கா!*

*நான் எங்கவீட்ல இருந்து*
*பார்ப்பேன்!*
*சிரித்துப் பழகத் தொடங்கினோம்!*
*நட்பு மலர்ந்து மணம்பரப்புது!*
*நான் விரும்பியவள்*
*என்னை விரும்புகின்றாள்!*
*நட்புத் தோழிகளானோம்!*
*இந்தநட்பின் பயன்*
*விதையற்ற பழம்போல்*
*தடையின்றி சுவைக்கிறது.*

**குறள் 1192**

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

*கயல்*
*எங்கெங்கேயோ படிச்சுட்டு*
*ஆறாம் வகுப்புக்கு*
*இங்கவந்திருக்க!*
*நாமெல்லாம் காலம்*
*நகர்த்துற காய்கள்!*
*இந்தஆண்டு இங்க*
*சேர்ந்து நமக்குள்ள*
*நட்பு பொழிவது என்பது*
*பருவகாலத்துல*
*வானம் மழைபொழிவது*
*போலத்தான்.*

**குறள் 1193**

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.

இணைபிரியாத
நட்பில் திளைக்கும்
எம்போன்ற
குழந்தை
நண்பர்களுக்குத்தான்
நட்பின் இன்பத்தில்
மிளிர்கிறோம்
என்றபெருமிதம்
ஏற்படும்.

**குறள் 1194**

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

கிளித்தட்டு விளையாடும்
போது
அந்தப் பாமதியைப்
பார்த்தேன்!
அவள் ஆறாவதாம்!
என்பெயர் நிறைமதி!
நான் ஏழாம்வகுப்பு!
பெயர்ப்பொருத்தம் இப்படி
இருந்ததால்
நான் நட்புவளர்க்க
எண்ணினேன்!
அவள் வரும்போது சிரிப்பேன்!
வலியசென்று பேசுவேன்!
நான் விரும்பினாலும்
அவள் விரும்பவில்லைபோலும்!
அவளுக்கு நட்புணர்வேஇல்லை

## இதுமகிழ்ச்சியா?

### குறள் 1195

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.

*அவள்பெயர் காவியா!*
*என்பெயர் ஓவியா!*
*நான் அவளிடம்*
*நட்பு வளர்த்து*
*பாடங்களைப் புரிந்துகொள்ளத்*
*துடிக்கிறேன்!*
*அவள் கண்டுகொள்ள*
*மறுக்கிறாள்!*
*நான்விரும்பி*
*அவள் விரும்பவில்லை*
*என்றால்*
*மகிழ்ச்சி மலருமா?*
*வளருமா?*

## இருவரும் விரும்பவேண்டும்

### குறள் 1196

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

*என்தோழிக்குத்*
*தோழி யாழினி!*
*நான் ஆறாம்வகுப்பு!*
*அவள் ஏழாம்வகுப்பு!*
*அவளது நட்பை*
*நான் விரும்புகிறேன்!*

*ஆனால் அவள் விரும்பவேண்டுமே!*
*காவடியின் இருபக்கம்*
*சுமைபோல் இருந்தால்*
*இனிமைதான்!*
*ஒருபக்கம் என்றால்*
*கொடுமைதான்!*

**என் வேதனை எனக்கு மட்டும்**

**குறள் 1197**

பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்.

*என் தங்கையின்*
*தோழியிடம்*
*நானும் நட்பு கொள்கிறேன்!*
*அவள் ஏற்கவில்லை!*
*என்மனமோ துடிக்கிறது!*
*இந்த நட்புணர்வு*
*ஒருபக்கம் இருப்பதால்*
*நான்படும் துன்பத்தைக்*
*கண்டுகொள்ளவில்லை!*
*என்வேதனை எனக்குமட்டுமே!*

## இது கல் நெஞ்சமோ?

**குறள் 1198**

வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

*பக்கத்து வீட்டுப்*
*பூவரசியும் நானும்*
*உயிர்த்தோழிகள்!*

*ஊருக்குப்போறேன்*
*வர பத்து நாளாகும்னு*
*அழாத குறையா சொல்லிட்டுப் போனா!*
*அஞ்சுநாளாச்சு!*
*ஒருவார்த்தபேசல!*
*இதையும் பொறுத்துக்கிட்டு*
*இருக்கும் என்னப்போல*
*கல்நெஞ்சம் கொண்டவங்க*
*யாருமுண்டோ?*

## செய்தியே செந்தேன்!

### குறள் 1199

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

*நீங்கள்ளாம் யார பத்திபேசுறீங்க?*
*அதாம்மா உன்னுடைய*
*நட்புத்தோழி பூங்கொடிய*
*பத்திதான் பேசுறோம்!*
*ஓ! அவளா!*
*குடியரசுத்தலைவருகிட்ட*
*விருதுவாங்கப்போனா!*
*வந்துபேசுறாளோ இல்லையோ!*
*அவளுடைய புகழைக்*
*கேட்டாலே செந்தேனாய் இனிக்குது.*

## அது எளிது

### குறள் 1200

உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு.

தேர்வுல
மதிப்பெண்கள்
கொறஞ்சிருச்சு !
தோழியாச்சேனு
மன ஆறுதலுக்கு
தேடிப்போனா
அவசரவேலைன்னு
போயிட்டா !
அவகிட்ட சொல்லி
ஆறுதல் அடையறதவிட
அந்தக் கடலையே
தூர்வார்ரது
எளிதான வேலையாக்கும்.

## 121. நினைந்தவர் புலம்பல்

### நினைத்தாலே இனிக்கும்

**குறள் 1201**

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

நானும் தோழியும்
சிறுமிகள்தான் !
அடிக்கடி இளநீர்
பருகுவோம் !
சுவையாய் இருக்கும் !
இளநீரைப் பருகினால்தான்
சுவைதெரியும் !
தோழியின்

*அன்புகலந்த*
*நட்பை*
*நினைத்தாலே*
*இனிக்கும்!*
*இன்பம் ததும்பும்.*

**குறள் 1202**

எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்று இல்.

*இந்தஆண்டு*
*முழுவதும்*
*நானும் அமுதாவும்*
*நட்பில் ஒன்றித்*
*திளைத்திருந்தோம்!*
*ஆண்டு நிறைவுற்றது!*
*அவளும் விடுமுறைக்கு*
*ஊருக்குச் சென்றுவிட்டாள்!*
*சேர்ந்திருந்தவளை*
*எண்ணி மகிழ்வதால்*
*இந்தப் பிரிவோ*
*துன்பமாகத் தெரியவில்லை!*
*நட்பும் அன்பும்*
*என்றும் இனிமைதான்.*

**குறள் 1203**

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

*அம்மா!*
*இந்தத் தும்மலோ*

*வர்ர மாதிரி இருக்கு*
*ஆனால் வரமாட்டேங்குதும்மா !*
*இதுபோல*
*என் உயிர்த்தோழி*
*கலைச்செல்வி*
*என்ன நெனக்கிறமாதிரி*
*இருந்து*
*நெனக்காம*
*இருந்துருவாளோ !*
*அடிபோடி பைத்தியம் !*
*உனக்கு வேலையே இல்லையா !*

**குறள் 1204**

**யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எந்நெஞ்சத்து**
**ஓஒ உளரே அவர்.**

*ஏண்டி*
*சோகமா இருக்க ?*
*என்னாச்சு ?*
*அந்தப் பக்கத்துவகுப்பு*
*பாவரசி*
*என்மனசவிட்டு*
*நீங்காமஇருக்கா !*
*அதேபோல*
*நானும் அவமனசவிட்டு*
*நீங்காம இருக்கேனா ?*
*இதுக்குத்தான் இப்படியா !*
*இங்கேயே இரு*
*நான்போயி ஒருநடை*
*கேட்டுவந்து சொல்றேன் !*

**குறள் 1205**

தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்து ஓவா வரல்.

*அந்தக் கயல்விழி*
*அய்ந்தாவதாம்!*
*நான் நாலாவதாம்!*
*எனக்கு அவள்நட்பில்*
*இடமில்லையாம்!*
*ஆனா*
*அவமட்டும்*
*என்நட்புச்சுரங்கம்*
*இதயத்தில்*
*புகுந்து கொள்வாளாம்!*
*என்ன நியாயம்?*
*இதற்காக வெட்கப்படமாட்டாள்போல!*

## பிரிவால்வருத்தம்

**குறள் 1206**

மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடியான்
உற்றநாள் உள்ள உளேன்.

*ஏண்டி*
*நீயும் அந்த*
*டில்லித் தோழி சோனாவும்*
*விடுமுறையில*
*அப்பிடிப்பழகுனீங்க!*
*அவ ஊருக்குப்போயிட்டா!*
*நீ எப்பிடிஇருக்க!*
*அத ஏன்கேக்குற*

*அக்கா!*
*ரொம்ப வருத்தமாதான்*
*இருக்குது!*
*அவளோடட சேர்ந்திருந்த*
*நாள்களை நெனச்சுதான்*
*இருக்கேன்!*
*வேறுஎப்படி இருக்கமுடியும்?*
*நடைமுறை இவ்வளவுதானே!*

## மறந்தா அவ்வளவுதான்

**குறள் 1207**

மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.

*அப்பா!*
*பக்கத்துவீட்டுத்*
*தோழி பாமா*
*நாலுதெரு தாண்டிதான்*
*வீடு மாத்திபோயிருக்கா!*
*நாலுநாள்தான் ஆகுது!*
*அவளுடைய நட்பை*
*நெனக்காத நேரமில்ல!*
*இப்படி மறக்காம*
*இருக்குறப்பவே மனசு*
*கொதிக்குதே!*
*மறந்தேன்னா*
*அவ்வளவுதான் போல!*
*இல்லஅப்பா!*
*அம்மா!*
*எனக்குஒன்னுமே புரியலம்மா!*
*அடபோங்க அப்பா!*

## நினைக்க நினைக்க மகிழ்ச்சி

### குறள் 1208

எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு.

*என்ன நீயாசிரிக்கிற!*
*வாம்மாவா!*
*நம்ம தோழி தேன்குழலி*
*இருக்காளே அதாண்டி அய்ந்தாவது*
*படிக்கிறாள்ள*
*அவள எவ்வளவு*
*நெனச்சாலும் கோபப்படவே*
*மாட்டா!*
*அவ எனக்குச்செய்ற*
*பெரிய உதவிஅது.*
*அதநெனச்சேன் !சிரிச்சேன் !*
*இரக்கமே இல்லை!*

### குறள் 1209

விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து.

*என்வகுப்புத் தோழி*
*வானதி*
*அவ வீட்டுக்குவரச்சொன்னா!*
*நானும் போனேன்!*
*நீவேற நான்வேற இல்லடி!*
*ஒரேதட்டுல சாப்பிடலாமா?*
*என்றாள்!*
*சரியென்று சாப்பிட்டுவிட்டு*
*வீட்டுக்கு வந்துட்டேன்!*
*அடுத்தநாள் வந்தா!*

*எங்கஅப்பாவுக்கு திடீர்னு*
*வேற ஊருக்கு போட்டுட்டாங்க!*
*காஷ்மீர்கிட்ட இராணுவ*
*முகாம்லவேல!*
*நாளக்கே போகணும்!*
*சொல்லிட்டுப் போயிட்டா!*
*எப்படிச் சொன்னா*
*இப்படி இரக்கமில்லாம*
*போறாள!*
*நெனச்சு நெனச்சு*
*வருந்திவருந்தி*
*உயிர் கொஞ்சம்கொஞ்சமா*
*போகுது!*

## நிலவே மறையாதே

### குறள் 1210

விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி.

*நிலவே!*
*என்னோட பிரியாம*
*இருந்த என்உயிர்த்தோழி*
*நதியா*
*பிரிஞ்சு வேறபள்ளிக்கூடத்துக்கு*
*போயிட்டா!*
*வேற பகுதிக்கு*
*வீட்டை மாத்திப்போயிட்டா!*
*இப்ப வீட்லதான்இருப்பா!*
*அவள தேடிக்கண்டுபிடிக்க*
*நீ*
*துணையா இருக்கணும்!*
*மறையாம இரேன்.*

# 122. கனவு நிலை உரைத்தல்

## என்ன விருந்தளிப்பது?

### குறள் 1211

*காதலர் தூதொடு வந்த கனவினுக்கு*
*யாதுசெய் வேன்கொல் விருந்து.*

*அம்மா அம்மா!*
*நேத்து என்கனவுல*
*என் தோழி சுதா*
*வந்தா!*
*அவ வெளிநாடுபோயி*
*ஒரு மாசமாச்சு!*
*கனவைத்தூதா*
*அனுப்பி இருக்காம்மா!*
*அன்பை ஏந்திவந்த கனவுக்கு*
*என்ன விருந்துவச்சு*
*பாராட்டலாம்? சொல்லும்மா!*
*அம்மா*
*குழந்தையைப் பார்த்துச் சிரித்தாள்!*

### குறள் 1212

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன்.

*அம்மா!*
*இந்த தாத்தா*
*எப்பம்மா வருவாரு!*
*இன்னும் ரெண்டுநாள்ல*
*வந்துரு வாரும்மா!*

*அடபோம்மா!*
*எனக்கு தூக்கமே வரமாட்டேங்குது.*
*ஒருவேள நான்*
*கெஞ்சுறதுக்காக*
*என்கண்கள் தூங்கினா*
*கனவுல வருவாருல்ல*
*அப்ப சொல்லுவேன் நான்இன்னும்*
*உயிரோடதான் இருக்கேன் தாத்தானு.*

## SKYPE

### குறள் 1213

**நனவினால் நல்கா தவரைக் கனவினால்**
**காண்டலின் உண்டென் உயிர்.**

*இந்தப்பாட்டி லண்டனுக்குப் போனாங்க!*
*திரைல பாத்துப்பாத்து*
*வெறுத்துப் போச்சு!*
*நினைவில் வந்து பாத்து*
*அன்புகாட்டல! கனவுல*
*அடிக்கடிவரதுனால*
*என்உயிர்நெலச்சிருக்கு!*

### குறள் 1214

**கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**
**நல்காரை நாடித் தரற்கு.**

*அம்மா!*
*அப்பா அலுவல்காரணமா*
*ஊருக்குப்போயி*
*ஆறு நாளாச்சு.*
*மனசு ஏங்குதும்மா!*

*நேரில் வந்து அன்பா*
*நாலுவார்த்த பேசமுடியாதுல !*
*நான் தூங்குறப்ப*
*அவர தேடிப்போயி*
*கொண்டு வந்துகனவு*
*காட்றதுனால*
*அந்தப் பாசம்கலந்த*
*அன்பு*
*இன்பமா இருக்குதும்மா !*

**குறள் 1215**

**நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்**
**கண்ட பொழுதே இனிது.**

*அம்மா*
*என்னுடைய அத்தை*
*போனவாரம் கடைக்கு*
*கூட்டிப்போனாங்க !*
*கேட்டதெல்லாம் வாங்கித்தந்தாங்க !*
*நேராபாத்தப்போ*
*இன்பமா மகிழ்ச்சியா*
*இருந்துச்சு !*
*ஊருக்குப் போயி ரெண்டு*
*நாளாச்சு !*
*நேத்து கனவுல*
*வந்தாங்க*
*அதுவும் இன்பமா*
*இருந்துச்சு !*
*அத்தைன்னா அத்தைதான் !*

## குறள் 1216

நனவென ஒன்றில்லை ஆயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்.

*அம்மா*
*நம்ம சாரு அக்காவோட*
*குட்டிப்பாப்பா*
*இருக்காளே*
*அவ என்கனவுல*
*வந்தாம்மா!*
*மழலையில பேசுபேசுன்னு*
*பேசினாம்மா!*
*சிரிச்சு ரசிச்சுக்கிட்டு*
*இருந்தேம்மா!*
*திடீர்னு முழிச்சிட்டேம்மா!*
*இந்த விழிப்புவந்து*
*கெடுக்காம இருந்திருந்தா*
*மெய்மறந்து ரசிச்சுக்கிட்டே*
*பிரியாம*
*இருந்திருப்பேம்மா.*

## குறள் 1217

நனவினால் நல்காக் கொடியார் கனவனால்
என்எம்மைப் பீழிப் பது.

*அம்மா*
*இந்த அக்கா*
*இங்கேயே படிச்சிருக்கலாம்மா!*
*என்னோட வம்பிழுத்து*
*என்ன அழவைப்பா!*
*அது ஒருமகிழ்ச்சிதாம்மா!*

இப்ப வெளியூர்லபடிக்கிறா!
அவசெஞ்ச குறும்பெல்லாம்
ஞாபம்வருது!
நேரா இருந்து அன்புகாட்டாத
அக்கா என்கனவுல வந்து
பிரிவுத் துயரைப்
பெரிசாக்குறாம்மா!
கொடுமை!

**குறள் 1218**

**துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்**
**நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.**

கனிமொழி!
நம்ம தமிழாசிரியை
வீட்ல மாலைநேர
வகுப்புக்கு போகும்போது
கொஞ்சநேரம் அவங்க
தம்பிப் பாப்பாவோட
வெளாடுவோம்ல!
கொஞ்சக் கொஞ்ச
கொஞ்சனும்போல இருக்கும்ல!
ஆமாண்டி!
அந்தத் தம்பிப்பாப்பா
கனவுல வந்தாண்டி!
வந்து தோள்ல படுத்துக்கிட்டான்!
ஆகான்னு முழிச்சுப்பாத்தா
வேறெங்கேயும் போகாம
என்மனசுக்குள்ள
விரைந்து நுழைஞ்சுக்குறாண்டி!

## குறள் 1219

நனவினால் நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர்.

*அம்மா அங்கயற்கண்ணி*
*நம்மதோழி*
*மங்கைய*
*நாலஞ்சுநாளா*
*பாக்கவேமுடியல!*
*என்ன ஆச்சு?*
*அவ தாத்தா*
*மருத்துவமனையில*
*இருக்காராம்!*
*அதான் வீட்டவிட்டுவெளியில்*
*வரல! எனக்கு கனவுலவராஅவ!*
*கனவுல பாக்காதவங்கதான்*
*நேரிலே பாக்கமுடியலன்னு*
*நொந்துக்குவாங்க!*
*ம்! நீகொடுத்துவச்சவ.*

## குறள் 1220

நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர்.

*இணைபிரியாம*
*சிந்து*
*உன்னோட அப்படி*
*நட்பா இருந்தாளே*
*விடுமுறையில அமெரிக்கா*
*போனா!*
*எப்படித்தான்அவள்*
*இவள விட்டுட்டுப்போனாளோ!*

*என்ற அவளையே சாடுறாங்களே*
*இவங்க தோழியெல்லாம்*
*கனவுல வரமாட்டாங்களோ!*
*அவ என்கனவுலஅடிக்கடி*
*வர்ரது தெரியாதோ!*
*மத்தவங்கள மெள்றதே பொழப்பு.*

**குறள் 1221**

**மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.**

*மாலைப் பொழுதே!*
*என்னுடைய நட்புத்தோழி*
*விளையாட வர்ரேனு சொல்லிட்டு இன்னும்வரலியே!*
*நீவேற மறஞ்சுகிட்டே இருக்கே!*
*ஏக்கம் அதிகமாகுது!*
*நீ மாலைப்பொழுதா இல்லியே!*
*எதிர்பார்த்துக் காத்திருக்கும்*
*தோழியைப் படபடக்கச் செய்யும்*
*பாய்ந்துவரும்*
*வேலாக அல்லவா இருக்கிறாய்!*
*நீவாழ்க!*

**குறள் 1222**

**புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்**
**வன்கண்ண தோநின் துணை.**

*மாலைப்பொழுதே!*
*என்தோழி படிக்கவரேன்னு வரமாட்டேன்டா!*
*நான் தான் வாடிப்போயிட்டேன்!*
*ஆமா! நீ ஏன் இப்படி ஒளிமங்கிமங்கலா*
*இருக்க?*

*உன்தோழியும் என் தோழிமாதிரியே*
*இரக்கமற்றவளா?*

**குறள் 1223**

பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும்.

*நேற்று சாயந்திரம்*
*என் தோழி பக்கத்துல*
*இருந்தா!*
*அப்பஇந்த*
*மாலைப்பொழுது*
*பயந்து பயந்து*
*விலகி நின்னு மகிழ்ச்சிய*
*கொடுத்தது!*
*இன்னக்கி*
*அவ பக்கத்துல இல்லனு*
*இப்ப இந்த*
*மாலைப்பொழுது*
*பக்கத்துல வந்து*
*நானே வெறுக்குற*
*அளவுக்கு*
*என்னைச் சீண்டுதே!*

**குறள் 1224**

காதல் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

*எங்க பாட்டிக்கு*
*சாயந்தரந்தான்*
*நேரம் கிடைக்கும்!*
*நல்லா பேசுவாங்க*

*கதகயெல்லாம் சொல்லுவாங்க!*
*பொழுது போறதே*
*தெரியாது!*
*ஊருக்கு போயி*
*மூணுநாளாச்சு!*
*இந்த மாலைப்பொழுது*
*வந்தாலே*
*ஏதோ போர்க்களத்துல*
*பகைவர் ஓங்கி சுழற்ற*
*வாள்போலவருது!*
*ஆத்திரமாவருது!*

**குறள் 1225**

**காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்**
**மாலைக்குச் செய்த பகை.**

*காலையில*
*பள்ளிக்கூடத்துக்குப் போனா*
*என் நட்புத்தோழிய*
*சந்திப்பேன்! பேசுவேன்!*
*மாலையில*
*பிரிவோம்னு தெரிஞ்சாலும்*
*மகிழ்ச்சிதான்!*
*இந்தக் காலைப் பொழுதுக்கு*
*நான் செய்த நன்மைஎன்ன?*
*இதுவே மாலைப்பொழுதா மாறுது!*
*பள்ளிவிட்டு வீட்டுக்குப்போறேன்!*
*நட்புத்தோழிய பிரிஞ்சுபோறேன்!*
*ஆனால் வருத்தமா இருக்கு!*
*இந்த மாலைப் பொழுதுக்கு*
*நான்செய்த துன்பம் என்ன?*

## குறள் 1226

**மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத**
**காலை அறிந்த திலேன்.**

*நேற்றுமாலை*
*என் தோழி கலையரசி*
*என்னுடன் விளையாடிப்*
*பேசி மகிழ்ந்திருந்தாள்!*
*மனதிற்கு*
*இன்பமாக இருந்தது!*
*இன்று அவள்வரவில்லை!*
*மனதிற்குச்*
*சுமையாக இருக்கிறது!*
*ஏக்கப்பிழிவில் துவள்கிறேன்!*
*அவள் உடனிருந்தபோது*
*மாலைப்பொழுது*
*இவ்வளவுதுன்பம்*
*தருவது என்பதை*
*அறியவில்லையே!*

## குறள் 1227

**காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி**
**மாலை மலரும்இந் நோய்.**

*என்தோழி கவிதா*
*பள்ளியில் என்னருகில்*
*இருக்கின்றாள்!*
*காலையில் பார்த்து சிரிப்போம்!*
*நட்பு அரும்பும்!*
*மதிய உணவுவேளையில்*
*ஒன்றாக உணவைப்*

*பரிமாறி உண்டுமகிழ்வோம்!*
*நட்பு போதாகும்!*
*மீண்டும் வகுப்புத் தொடரும்!*
*மாலைவகுப்பு முடிந்ததும்*
*தோள்மீது கைபோட்டு*
*மெய்மறந்து*
*நட்பில் திளைப்போம்!*
*நட்பும் அன்பும் மலர்ந்து*
*மணம்வீசும்!*
*வீட்டுக்குச் சென்று*
*நினைத்தாலே ஏங்கவைக்கும்*
*இந்தநோய்.*

**குறள் 1228**

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

*ஊருக்குப்போன*
*தாத்தா*
*இன்று மாலைதானே*
*வரேன்னு சொன்னாரு!*
*ஆயன் குழலோசைகேட்குதே!*
*மலையில் எதிரொலித்துத்*
*தென்றல் சுமந்துவந்து*
*என்செவிகளில் இசைபொழியுது!*
*ஆனால்*
*தாத்தாவைப் பாக்குற ஏக்கத்த*
*அதிகமாக்கும் தூதாகி*
*படைக்கருவி ஓசைபோல்*
*கொல்லுதே!*
*நானென்ன செய்வேன்?*

## குறள் 1229

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

*நாளைதேர்வு!*
*நட்புத் தோழி*
*கண்ணகி சேர்ந்துபடிக்க*
*வந்துருவேன்னு*
*சொன்னா!*
*இன்னும் வரல!*
*மாலைப் பொழுதும் வந்துருச்சு!*
*நானும் படிக்காம*
*காத்திருக்கேன்!*
*நிலவும் வானத்துல*
*மங்கலா தெரியுது!*
*மதியைப் பார்த்து*
*என்மதி மயங்குது!*
*பைத்தியம் பிடிக்கிற*
*மாதிரி இருக்கு!*
*என்னமட்டும் பாதிக்கிறதா*
*தெரியல!*
*இந்த ஊரையே*
*மயக்குற மாதிரிஇருக்கு!*

## குறள் 1230

பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்.

*அம்மாவும் அப்பாவும்*
*வேல பாக்குறாங்க!*
*காலைல போனா இரவுதான்*

*வராங்க!*
*ஆயாதான் என்ன பாத்துக்குறாங்க!*
*அவங்க சம்பாதிச்சாதான்*
*நான் நல்லா படிக்கலாமாம்!*
*உண்மைதான்.*
*அவங்கவேலைக்குபோறதபத்தி*
*கவலப்படாத நான்*
*மாலைப் பொழுது வந்துட்டா*
*இன்னும் வரலேன்னு*
*நெனச்சு நெனச்சு*
*ஏங்குறேன்!*
*ஓடிஓடி வாசல பாக்குறேன்!*
*மனசுஅலைபாயுதே!*

## 124. உறுப்புநலன் அழிதல்

**குறள் 1231**

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.

*ஏம்மா*
*உன்னோட கண்ணெல்லாம்*
*அழகிழந்து இருக்கு?*
*அந்தப்பூவெல்லாம்*
*உன்கண்ணப்பாத்து*
*மயங்குமே!*
*இப்ப ஏம்மா உன்கண்களே*
*பூவைப்பாத்து*
*வெக்கப்படுற அளவுக்கு ஆயிருச்சு?*

*அதுவாம்மா என்தோழி*
*மாலா வேறபள்ளிக்கூடம்*
*போயிட்டாம்மா!*
*அவள நெனச்சு நெனச்சு*
*கண்ணெல்லாம் ஏங்குதம்மா!*

**குறள் 1232**

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண்.

*ஏம்மா பள்ளிக்கூடத்துல இருந்து*
*வந்தும் வராததுமா*
*பையெல்லாம் தூக்கி எறியற,*
*தேம்பித் தேம்பி அழுற*
*என்னாச்சு உனக்கு?*
*இல்லப்பா ஒண்ணுமில்ல!*
*சொல்லும்மா! என்னாச்சு?*
*கலா என்னோட நட்பை*
*ஏத்துக்கலன்றதை*
*கண்களே காட்டிக்*
*கொடுத்துருச்சே!*
*அடச்சே!*

**குறள் 1233**

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

*அம்மா!*
*ஏம்மா உன்தோள்கள்*
*மெலிஞ்சுருச்சு!*
*அதுவா*
*நீ பிறந்தது முதல்*

*அஞ்சுவயசு வரைக்கும்*
*தோள்லேயே படுத்துத்*
*தூங்கினே! மகிழ்ச்சியா*
*இருந்துச்சு!*
*இப்பல்லாம்*
*தோளைத் தவிர்த்து*
*தனியா படுத்துக்குர!*
*அந்த ஏக்கத்துல மெலிஞ்சு போச்சுமா!*
*என்னமோபோ!*
*எனக்குத் தூக்கம்வருது.*

**குறள் 1234**

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

*ஏம்மா தேவி*
*நாளுக்குநாள்*
*இப்படி தேஞ்சுக்குட்டேவர!*
*அத ஏண்டி கேக்குற!*
*லண்டன்ல என்னோட*
*அத்தை இருக்காங்க!*
*அவங்க குழந்தய பாத்துக்க*
*எங்க தாத்தா பாட்டி*
*போயி ரெண்டுமாச மாச்சு!*
*எனக்கு அவங்கன்னா உயிர்!*
*அந்தப் பிரிவுத்துயர ஏக்கத்துனால*
*என் உடல் மெலிந்து*
*தோள்கள் அழகிழந்து*
*வளையல்கள் கழன்று*
*விழற மாதிரி நெலம ஆயிருச்சுடி!*

*அவங்க வந்தபிறகு பாரேன்!*
*மூணுமடங்கு தெளிஞ்சுருவேன்!*

**குறள் 1235**

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

*ஆமா*
*நீ எப்பவுமே*
*சிரிச்சுக்கிட்டே கலகலப்பா*
*இருப்பியே!*
*என்ன ஆச்சு கவிதா உனக்கு?*
*இப்படி மெலிஞ்சு போயிட்ட!*
*இல்ல அமுதா!*
*ஒருவாரமா எங்கவீட்ல*
*உறவுக்காரங்க கூட்டம்!*
*சிரிப்பும் கும்மாளமா நல்லா*
*இருந்துச்சு!*
*அதில் குமுதான்னு நாலாவது*
*படிக்கிறபொண்ணு!*
*நல்லா பழகுனாடி!*
*அவங்க எல்லாரும் ஊருக்குப்போயி*
*நாலுநாள் ஆச்சு!*
*வீடே வெறிச்சோடி இருக்கு!*
*குமுதாவ மறக்கவே முடியல!*
*அவ கொடியவளோ?*
*மெலிஞ்சு வளயல் கழன்று*
*விழற அளவுக்குத் தோள்களும்*
*மாறி*
*ஊருக்கே காட்டிக் கொடுத்துருச்சுடி*
*ஏக்கத்தை!*

## குறள் 1236

தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

*என்னோட அந்தக் குழந்த*
*அவ்வளவு பாசமா*
*பழகுச்சு!*
*நான் ஊட்டுனாதான்*
*சாப்பிடும்! பாடுனாத்தான் தூங்கும்!*
*அவங்க அம்மாகிட்ட கூட*
*தயங்கித் தயங்கித்தான் போகும்!*
*போனவாரம் ஊருக்குப் போனாங்க!*
*ஒரேஅழுகை! ஒருவழியா*
*அனுப்பிவச்சேன்!*
*ஆனா என்னால மறக்கவே முடியல!*
*நானும் ரொம்ப மெலிஞ்சுட்டேன்!*
*வளையல் கழண்டு விழுகுற*
*அளவுக்கு தோளும் தளர்ந்துபோச்சு!*
*இதுக்கு அந்தக் குழந்த*
*என்னசெய்யும்?*
*எல்லோரும் குழந்தையை*
*வசைபாடுறாங்க!*
*அதக்கேட்டு நொந்துட்டேன்!*

## குறள் 1237

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்
கென்வாடுதோட் பூசல் உரைத்து.

*என்தோழி கயல்*
*இமயமலைப் பகுதிக்குச்*

*சுற்றுலாபோனா! உயிர்த்தோழிதான்!*
*ஒருவாரமாச்சு! பேசவேஇல்ல!*
*அவள நெனச்சு ஏங்கிட்டே*
*இருக்கேன்! என்தோள்கள் சோர்ந்து*
*வாடிப் போயிருச்சு! இந்த நெலமய*
*அவளுக்கு எடுத்துச் சொல்லி*
*பெருமை அடைய மாட்டாயோ*
*நெஞ்சே!*

**குறள் 1238**

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

*என்னுடைய*
*அக்கா குழந்தை*
*எப்பவுமே என்னைத்தான்*
*கட்டிப்பிடிச்சுத் தூங்குவா!*
*அவளுக்கு மூணுவயசு!*
*எனக்கு ஆறுவயசு!*
*சரிதூங்கிட்டாளேனு*
*கொஞ்சம் கைகளைத் தளர்த்தினால்*
*போதும்!*
*சிணுங்குவா! லேசாமுழிச்சுப்*
*பாப்பா! நெத்தியெல்லாம்*
*சுருங்கிப் போயிரும்!*
*பாவமாஇருக்கும்!*

**குறள் 1239**

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

*அய்ந்து வயது குழந்தைநான்!*
*அம்மாவைக்*
*கட்டிப்பிடித்துத்*
*தூங்கிக் கொண்டிருந்தேன்!*
*தழுவலில் இருந்து*
*அம்மாவின் கைப்பிடி*
*சிறிதுதளர*
*அந்த இடைவெளியில்*
*பூங்காற்று நுழைய*
*அம்மா என்னைவிட்டுப்*
*பிரிந்து எழுகின்றாளோ*
*என்று பயந்தேன்! ஏக்கத்தில்*
*சற்றேவிழித்தேன்!*
*என்கண்களில் கண்ணீர்*
*வழிந்தது!*

**குறள் 1240**

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

*அம்மாடி எழுந்திரு! பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு!*
*ஏம்மா அழற?*
*கண்ணெல்லாம் செவந்திருக்கு!*
*முடிகலஞ்சு நெத்தியில விழுந்திருக்கு!*
*என்ன கோலம் இது!*
*அப்பா! அப்பாவ நெனச்சுதாம்மா!*
*தலவலிச்சுச்சு! கண்ல இருந்து*
*தண்ணியா வருதும்மா!*
*அடச்சீ! வேலநிமித்தம் ஊருக்கு போயிருக்காரு!*
*அப்பா இன்னக்கி நீ*

*பள்ளிக்கூடத்துல இருந்து*
*வர்ரதுக்குள்ள வந்துருவாரு!*
*வெளியில் போவோம்!*
*அழக்கூடாது! சரியா?*

## 125. நெஞ்சொடுகிளத்தல்

**குறள் 1241**

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து.

*அம்மா!*
*உங்கமகளுக்கு*
*எல்லாவகையான சிகிச்சையும்*
*கொடுத்தாச்சு!*
*நோய் குணமாகல!*
*உங்க வீட்ல ஏதாவது*
*சிக்கல்னா ஒளிக்காம சொல்லுங்க!*
*பாட்டி பாட்டினு சொல்றா!*
*என்னம்மா நடந்துச்சு?*
*மருத்துவரய்யா! நாலுநாளக்கி*
*முன்னால் அவருடைய அம்மாவை*
*அவருமுதியோர் இல்லத்துல*
*சேத்துட்டாரு!*
*குழந்தபாட்டி! பாட்டினு*
*கதறுச்சு! அடுத்தநாள்ல இருந்து*
*உடம்பு சரியில்லாம போயிடுச்சு!*
*மனமே! நோய்க்கு மருந்த*
*என் அம்மாவாயால*
*சொல்லவச்சுட்ட!*

## குறள் 1242

காதல் அவரிலர் ஆகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு.

*என்தோழி பாலாமணி*
*போறா!*
*என்னைப் பாத்தும்*
*பாக்காத மாதிரி போறா!*
*போகட்டுமே!*
*அவ ஆறாவது!*
*நான் அஞ்சாவது!*
*அதுக்காக இப்படியா?*
*என்னோட நட்பை*
*மதிக்காதவள*
*நெனச்சு நீமட்டும்*
*ஏன் துடிக்கின்றாய் நெஞ்சே!*
*இந்த அறியாமை*
*உனக்குத் தேவையா?*

## குறள் 1243

இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.

*போன ஆண்டு*
*நான்காம் வகுப்புல*
*ஒன்றாக படித்தோம்!*
*நெருக்கமான நட்புதான்!*
*இந்தஆண்டு*
*அய்ந்தாம் வகுப்புல*
*வெவ்வேறு பிரிவுக்குப்*
*போயிட்டோம்!*

*என்னமோ அவகண்டுக்கவே*
*மாட்டாங்குற!*
*நமக்குத் துயரத்த*
*தந்தவள நெனச்சு*
*மனமே!*
*நீ ஏனோ*
*இப்படி வாடி வதங்குற?*

**குறள் 1244**

> **கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்**
> **தின்னும் அவர்க்காணல் உற்று.**

*என்னுடைய உயிர்த்தோழி*
*தேன்மொழி*
*அவங்க அம்மாவோட*
*வீட்டுக்கு வரேன்னு*
*சொல்லியிருக்கா!*
*நானும் எதிர்பார்த்துக்*
*காத்திருக்கேன்!*
*ஆனால் மனமே! நீஏன்*
*அவளப்பாக்க*
*முந்தி முந்திப்*
*போகின்றாய்?*
*நீ போறதுனா*
*இந்தக் கண்களையும்*
*அழைத்துச் சென்றுவிடு!*
*அவை, அவளைப் பார்க்க*
*வேண்டுமன்ற ஆசையிலே*
*என்னையே தின்றுவிடுவது*
*போல*
*குதிக்குது!*

## குறள் 1245

செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர்.

*மனமே!*
*நம்ம தாத்தா*
*இந்த மாமா வீட்டுக்குப்*
*போயிட்டுவரேனு*
*சொல்லிட்டுப் போனாரு!*
*ஏழுநாளாச்சு!*
*இன்னும் வரல!*
*நான் விரும்பினாலும்*
*என்விருப்பத்திற் கேற்ப*
*அவருவரல!*
*என்னை வெறுத்துட்டாருன்னு*
*நெனச்சு*
*நான் அவர்மீது வைத்திருக்கும்*
*அன்பையும்*
*பாசத்தையும், நேசத்தையும்*
*கைவிடமுடியுமா?*

## குறள் 1246

கலந்துணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.

*மனமே!*
*அந்தப் பாவரசியும் நானும்*
*ஆறுமாதமா பேசிக்கல!*
*ஏதோ இன்றுதான் வந்து*
*நட்புடனே பழைய மாதிரி*
*பேசுனா!*
*பொய்க்கோபத்தை விட்டு*

*சிரிச்சுப்பேசுனா!*
*உனக்கு இதெல்லாம் புரியுமா?*
*எங்க புரியப்போகுது?*
*இப்படிப் பிடிவாதமா*
*கோவத்தக் காட்றயே!*
*உன்கோவம் பொய்தானே?*

**குறள் 1247**

காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு.

*மனமே!*
*அவளுடன் நட்பை*
*உருவாக்கத் துடிக்கிறாய்!*
*ஆனாலும் தயங்குகிறாய்!*
*நானும் அவளும் ஆறாவது*
*படிக்கின்றோம்!*
*ஒன்று*
*நட்பை உருவாக்கத்*
*தளங்கள் அமைத்து*
*எலும்பையும் உருகவைக்கும்*
*அன்புத் துடிப்பைவிட்டுவிடு!*
*அல்லது*
*சொல்வதற்கு அஞ்சிஅஞ்சித்*
*தயங்கும் எண்ணத்தை விட்டுவிடு! புரியுதா?*

**குறள் 1248**

பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு.

*தோழி*
*கலையரசி என்னப்பத்தி*

நெனக்காம ஊருக்குப் போயிட்டா!
அவளை நெனச்சி நானிருக்கேன்!
துயரத்த கொடுத்துட்டா!
அதையெல்லாம்
நெனக்காம இந்த மனசோ
அவளத்தேடியே
அலையுது!
இந்த மனசுக்கு
அறிவே இல்லபோலிருக்கு!

**குறள் 1249**

உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறியென் நெஞ்சு.

ஆறாம் வகுப்புப்
படிக்கிறேன்!
எனது
உயிர்த்தோழி
அய்ந்தாம்வகுப்பு
படிக்கிறாள்!
பள்ளி தொடங்குவதற்கு
முன்பும்
முடிந்ததற்குப் பின்பும்
நாள்தோறும் சந்திப்போம்!
பேசுவோம்!
சேர்ந்தே வீட்டுக்கு வருவோம்!
என்மனசுலேயே
எப்பவும் இருக்கின்றாள்!
விலகமாட்டாள்!
அவள் உள்ளேயே

*இருக்கும்போது*
*நெஞ்சே! நீஎங்கே*
*எவரிடம்*
*அவளை நினைத்து*
*வெளியேதேடி*
*ஓடுகிறாய்?*

### நட்புப் பட்டை

**குறள் 1250**

துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின்.

*இன்றைக்கு நண்பர்கள் நாள்!*
*என்தோழி கலையரசிக்கு*
*நட்புப்பட்டை அணிய*
*விரும்பினேன்! அவள்வரவே இல்லை!*
*வராமல் சென்றவளை*
*நினைவில் சுமக்கின்றேன்!*
*அதனால் எனது மேனிஅழகு*
*வாடி வதங்குகிறது!*
*பார்ப்பவர்கள் நகைக்கின்றார்!*

## 126. நிறையழிதல்

**குறள் 1251**

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

*பள்ளி முடிந்து*
*வீட்டுக்கு வந்தாச்சு!*

*ஆனா மனசு பரபரக்குது!*
*இந்த அம்மா வேற*
*என்னையே உத்துஉத்துப்*
*பாக்குறா!*
*தோழி கலையரசி மேல*
*எனக்கு அவ்வளவு நட்புவேட்கை!*
*அது கோடரியாமாறி*
*அன்பென்னும் தாழ்ப்பாள் போட்ட*
*மனஅடக்கம் என்ற*
*கதவை உடைத்தெறியுதே!*
*இந்த அம்மாவேற*
*கண்டுபிடிச்சுருவா!*

**குறள் 1252**

**காமம் எனவொன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை**
**யாமத்தும் ஆளும் தொழில்.**

*எனக்கு இப்ப எட்டு வயசு!*
*கலைமதிக்கு ஆறு வயசு!*
*கலைமதி உயிர்த்தோழியா*
*மாறிட்டா!*
*அவள கொஞ்சநேரங்கூட*
*நெனக்காம இருக்கமுடியல.*
*சரி, பகல் பொழுதுதான்*
*இப்படி என்றால்*
*நள்ளிரவு நேரத்துல கூடவா*
*இரக்கமே இல்லாம*
*நெஞ்சுல நினைவலைகளை*
*எழுப்பிக்கிட்டே இருக்குறது?*
*நட்புவேட்கை கொடியதுதான்.*

## குறள் 1253

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

*அம்மாடி!*
*ஏம்மா பள்ளிக்கூடத்துல*
*வந்ததுலஇருந்து*
*ஒருமாதிரி இருக்க!*
*ஒண்ணுமில்லம்மா!*
*சும்மாத்தான் இருக்கேன்!*
*உன்னப்பாத்தா*
*அப்படித் தெரியல!*
*என்னமோ போ!*
*சே! பள்ளித் தோழியோட*
*சண்டபோட்டு வந்துட்டேன்!*
*இந்த நட்பு உணர்ச்சிய*
*எவ்வளவுதான்*
*அடக்க முயன்றாலும்*
*நம்மையும் மீறிவர்ர*
*தும்மல்மாதிரி*
*வெளிப்படுதே!*
*இப்படிக்காட்டிக்*
*கொடுக்குதே!*

## குறள் 1254

நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறையிறந்து மன்று படும்.

*ஏமஞ்சு!*
*வகுப்புதொடங்கிருச்சு!*
*உன்ன ஆசிரியை*

*கூப்பிடுறாங்கடி!*
*மஞ்சு எழுந்து நின்றாள்!*
*உன் முகமெல்லாம் வாடியிருக்கு!*
*என்னகாரணம்?*
*ஒன்றுமில்லை ஆசிரியை!*
*லேசா தலைவலி! அவ்வளவுதான்!*
*சரிசரி பாடத்தகவனி!*
*பக்கத்து வகுப்பு ராணி*
*இன்று பேச மறுத்துட்டா!*
*மனசு எப்படியோ இருக்கு!*
*நான் மனஉறுதி கொண்டவனு*
*நெனச்சேன்!*
*அவமேல உள்ள அன்பும் நட்பும்*
*என்னையும் மீறி*
*வகுப்புல காட்டிக் கொடுத்துறுதே!*

## குறள் 1255

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று.

*என்தோழி*
*பாமதிக்கு*
*இன்னொருத்தி*
*நட்பு கெடச்சதும்*
*என்னப்பிரிஞ்சு*
*போயிட்டா! அவபின்னால்*
*போகக் கூடாதுங்கற*
*மனவலிமை இந்த*
*அன்புநோய் உள்ளவங்ககிட்ட*
*இருப்பதில்லை போலும்.*
*இதுஎன்ன நோயோ!*

## குறள் 1256

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர்.

*நான் அழைக்க அழைக்க*
*என் நட்புத்தோழி*
*மங்கை*
*கண்டுகொள்ளாமல் சென்றுவிட்டாள்!*
*அவளுக்கு ஏழுவயது!*
*எனக்கோ ஆறுவயது!*
*இந்த அன்பும் பாசமும்*
*கலந்த நட்பு நோயோ*
*எதையும் பொருட்படுத்தாமல்*
*அவள் பின்னால் நெஞ்சைப்*
*போகச்சொல்லுதே!*
*நியாயமா?*
*என்னசெய்ய?*

## குறள் 1257

நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

*நட்புத்தோழி நளினிக்கும்*
*எனக்கும் அய்ந்துவயது வேறுபாடு*
*மாலையில் வந்தாள்!*
*அருகில்அமர்ந்தாள், சிரித்தாள்,*
*ஆடினாள்,*
*பள்ளியில் நடந்ததைப் பற்றி*
*பேசினாள்!*
*என்னைத் தொட்டாள்!*
*கிள்ளினாள்! செல்லமாக அடித்தாள்!*
*பழிப்புகாட்டினாள்!*

அனைத்தையும் மெய்மறந்து
ரசித்தேன்! அனுமதித்தேன்!
நட்புத் தோழி எனக்கு
விருப்பமானவற்றைச் செய்யும்
பொழுது
நட்புரிமையில்
தடைசொல்வதில்லை!
சூழ்நிலையும் மறந்துபோகும்!

**குறள் 1258**

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.

என்தோழி மல்லிகை இருக்காளே
சின்ன பொண்ணுதான்!
ஆனா அவ கண்ண உருட்டிஉருட்டிப்பேசுவா
பாரு அம்மா! அப்படியே உருகிருவோம்!
சொல்லால மயக்கிருவா!
என்னுடைய மனஉறுதியவே
தகர்த்துருவா!
அவளுடைய படைக்கலனா இருக்குறதே
அவளுக்கே உரித்தான
கொஞ்சுமொழிதான்.

**குறள் 1259**

புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.

என்தோழி யாழினி
என்ன நெனச்சுக்குட்டு இருக்கா?
அஞ்சு நாளா கண்டுக்கவே இல்ல!
உண்டுஇல்லனு ஆக்கணுந்தான்

*போனேன்!*
*ஆனால் இந்தப்பாழும்*
*மனசு இருக்கே*
*அவளோட பேசுபேசுன்னு*
*கிட்டகிட்ட போகுது!*
*நானும் என்*
*கோபத்தை*
*பிடிவாதத்த தூக்கி*
*எறிஞ்சிட்டு*
*அவள கட்டிப்பிடிச்சு*
*பேச ஆரம்பிச்சுட்டேன்!*
*எல்லாத்தயும் மறந்துட்டேன்!*

**குறள் 1260**

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்.

*தோழி கலைமதி*
*சிறியவள்தான்!*
*எப்படா பேசுவாள்*
*என்றிருந்தேன்!*
*பேசினோம்! மகிழ்ந்தோம்!*
*ஒருவழியாக நட்புக்கோபம்*
*தீர்ந்தது!*
*நெருப்பிலிட்ட கொழுப்பைப்போல்*
*உருகும் இளகிய மனம்கொண்ட*
*என்னைப் போன்றோர்கள்*
*சேர்ந்ததற்குப்பின்*
*மீண்டும் விலகிகோபம்*
*கொள்வது இயலாது!*
*உறுதியாகவும் அதில் இருக்கமுடியாது!*

# 127. அவர்வயின்விதும்பல்

**குறள் 1261**

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

*அம்மா!*
*என் நட்புத்தோழி*
*விடுமுறையில அவங்க*
*மாமா வீட்டுக்கு அமெரிக்கா*
*போனா!*
*ஒருமாசம் முடிஞ்சு நாளைக்கு*
*வர்ராம்மா!*
*அவளுக்காக*
*வழிமேல் விழிவச்சுப்*
*பாத்துப்பாத்துக்கண்கள்*
*சோர்ந்துபோச்சு!*
*என்னோட அறையில உள்ள*
*சுவத்துல கோடுபோட்டுக் கோடுபோட்டு*
*பிரிஞ்சநாள எண்ணிஎண்ணி*
*விரலும்தேஞ்சுபோச்சு!*
*எப்படியோநாளக்கி*
*அவவரா! அதுபோதும்எனக்கு.*

**குறள் 1262**

இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து.

*என் பள்ளித்தோழி*
*பாலாமணியும் நானும்*

அய்ந்தாம் வகுப்புவரை
ஒன்றாகப் படித்தோம்!
பாலாமணியின் தந்தைக்கு
சிங்கப்பூரில் வேலை கிடைத்ததால்
பாலாமணி சிங்கப்பூர்
சென்றுவிட்டாள்!
நட்புப்பிரிவை மறக்க
முற்பட்டால்
உடலும் தோளும்
வாடுகின்றன!
எங்கே வளையல்
கழன்று விழுந்துவிடுமோ
என்று அச்சமாக உள்ளது.
கண்டிப்பாக நடப்பது உறுதி.

**குறள் 1263**

**உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்**
**வரல்நசைஇ இன்னும் உளேன்.**

எங்கஅப்பா
இராணுவத்தளபதி!
நம்நாட்டு எல்லையிலே
துணிச்சலாக கடமையைச்
செய்கின்றார்!
நமது இராணுவவீரர்கள்
தூங்காமல் நாட்டைக்
காப்பதால்தான்
நாமிங்கே நிம்மதியாகத்
தூங்கமுடிகிறது!
இன்னும் அய்ந்துநாளில்

*எங்க வீட்டுக்கு விடுமுறையில*
*வர்ராரு!*
*அவர்வருகின்றார் என்பதற்காகவே நான்*
*காத்துக்கிட்டு இருக்கேன்!*

**குறள் 1264**

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடு கொடேறுமென் நெஞ்சு.

*அக்கா அக்கா*
*இன்னக்கி*
*நம்ம தாத்தாவும் பாட்டியும்*
*ஊரில் இருந்து வராங்க!*
*போயி பத்துநாளாச்சு!*
*அவங்க வரப்போறாங்கனு*
*நெனச்சு*
*என்னோட மனசு*
*மரக்கிளைகள்*
*படர்வதைப் போல*
*மகிழ்ச்சியில் படர்ந்து*
*துள்ளுகிறது!*
*என்னமோ நீசொல்ற*
*நான்கேட்டுக்கிறேன்*
*செல்லம்!*

**குறள் 1265**

காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு.

*அம்மா!*
*எதுத்தவீட்டு*

*மங்களா ஊருக்குப்*
*போயிருக்காம்மா!*
*அவங்க அம்மாகிட்ட*
*போயி கேட்டா*
*இன்னக்கி வருவா*
*நாளக்கி வருவான்னு*
*சொல்றாங்கம்மா!*
*நானும் பள்ளிக்கூடம் விட்டு*
*வரும்போதெல்லாம்*
*தினமும் கேக்குறேன்!*
*இன்னும்வரல! அவள என்னக்கி*
*நேராப்பாக்குறேனோ*
*அன்னக்கிதாம்மா*
*ஏக்கம், சோர்வெல்லாம்*
*நீங்கி மகிழ்ச்சியா இருப்பேம்மா!*

**குறள் 1266**

வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.

*என் பள்ளித்தோழி*
*செல்வியே!*
*என் உயிர்த்தோழி*
*அன்பரசி*
*இன்று வருகின்றாள்!*
*அவள் வரட்டும்!*
*இத்தனை நாள் பேசாத*
*பேச்சையெல்லாம்*
*பேசித்தீர்க்கின்றேன் பார்!*
*அன்பைப் பொழிந்து*
*மகிழ்கின்றேன் பார்!*

*மெய்மறந்து*
*நட்பில்*
*களிக்கின்றேன்பார் !*

**குறள் 1267**

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின்.

*அம்மா !*
*என்நட்புத்தோழி*
*நந்தினி*
*ஊரில்இருந்து வந்தவுடன்*
*இதுநாள்வரை பிரிஞ்சிருந்தத*
*நெனச்சு கோபப்படுவேனா ?*
*பிரிவுக்கோபத்தை*
*மறந்து*
*எப்போதும்போல பேசுவேனா ?*
*இல்ல*
*ரெண்டையும்*
*கலந்து நடந்துக்குரு வேனா ?*
*அந்தமகிழ்ச்சிய நெனக்கும்போது*
*ஒன்னும் புரியலியே !*

**குறள் 1268**

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

*அம்மா !*
*என்னுடைய அண்ணன்*
*உலகநட்புநாள் கட்டுரைப் போட்டியில்*
*கலந்துகொள்ள*
*டில்லிக்கு போயிருக்கான் !*

*அவன்மட்டும் வெற்றிபெற்று*
*குடியரசுத்தலைவர்கிட்ட*
*பரிசுவாங்கிட்டானா*
*அந்தவெற்றிய கொண்டாட*
*என்உயிர்த்தோழி தேன்மொழியோட*
*சேர்ந்து மகிழ்ச்சியில் திளைப்பேன்!*
*இன்பத்தின் எல்லையில்*
*உள்ளம் துள்ளத்துள்ள*
*கொண்டாடுவேன்!*
*அவளுக்குத் திகட்டத்திகட்ட*
*இனிப்புகள் வழங்குவேன்!*

**குறள் 1269**

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.

*அம்மா*
*மருத்துவமனையில*
*இருக்காங்க!*
*அறுவைசிகிச்சை பண்ணாங்க!*
*ஏழுநாள் இருக்கனும்னு*
*சொல்லிட்டாங்க!*
*நாளைக்கு வீட்டுக்குவரப்போறாங்க!*
*இத்தன நாள்கள் உளைச்சல்ல*
*பறந்துபோச்சு!*
*எதிர்பார்க்கும் ஏக்கம் ஒருமாதிரி*
*இருக்கும்.*
*ஆனால் இந்த ஒருநாள் பொழுது*
*ஏழுநாள் ஆனது போல*
*மெதுவா நகருது!*
*அம்மா ஏக்கம்னா இப்படித்தான்.*

**குறள் 1270**

**பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறினென்னாம்**
**உள்ளம் உடைந்துக் கக்கால்.**

*மனமே!*
*பள்ளிக்கூடம் தெறக்கப் போகுதேனு*
*என்நட்புத்தோழி*
*பக்கத்துஊர் பாமாவைப்*
*பார்க்கப்போனேன்!*
*அவ சென்னையில்*
*உள்ள பள்ளியில் சேரப்போயிட்டாளாம்!*
*அங்கேயே தங்கிப் படிப்பாளாம்!*
*கேள்விப்பட்டதும் மனசுகலங்கிடுச்சு!*
*ஒடஞ்சுபோச்சு!*
*மறுபடியும் சந்திச்சா என்ன?*
*சந்திச்சுப் பேசுனாத்தான் என்ன?*
*ஒருநன்மையும் இல்ல!*
*எப்பவுமே பாத்துப்பழகுறது எப்படி?*
*எப்பவாச்சும் பாத்துப்பேசறது எப்படி?*
*நட்பு கடல்லகரைச்ச காயந்தான்!*

## 128. குறிப்பு அறிவுறுத்தல்

**குறள் 1271**

**கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்**
**உரைக்கல் உறுவதொன் றுண்டு**

*இங்கபாரு கலைமதி!*
*நம்ம கயல்விழி*
*நம்மளோடபேசி*
*ஒருவாரம் ஆச்சு!*

*அவ ஏங்கிட்ட என்னமோ*
*சொல்லனும்னு நெனக்கிறா!*
*மறைக்கணும்னு நெனச்சாலும்*
*தடைகடந்து கண்கள்*
*சொல்லக்கூடிய செய்தி*
*அதுதான் என்னோட*
*பேசனும்னு விரும்பறத*
*சொல்லுது!*
*அதாவது இனிமே*
*இப்படிசண்டபோடாம*
*தொடர்ந்து நட்போட பழகனும்*
*அப்படிங்கறா! சரிதானே*
*தாயே! என்றதும்*
*சிரிக்கின்றாள் கயல்விழி!*

**குறள் 1272**

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.

*என்தோழி வேல்விழிக்கு நேற்று பிறந்தநாள்!*
*அவளுக்கும் எனக்கும் ஆறுவயசுதான்!*
*அவளுடைய எளிமையான ஒப்பனை*
*வளைந்ததோளின் அழகையும் பெண்மைப்*
*பண்புகளையும் வெளிப்படுத்தியது!*
*சிறுமிகளுக்கு இயற்கை அழகே அழகு.*

**குறள் 1273**

மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு.

*அம்மா! நாம் எத்தனை பேரை*
*பாக்குறோம், பழகுறோம்!*

*என்னோட படிக்கிற*
*எவ்வளோ பேர் இருக்காங்க!*
*ஆனா இந்த வனிதாவ பாத்தாமட்டும்*
*எனக்கு பிடிச்சிருக்கு!*
*பளிங்கு மாலைக்குள் தெரியும் நூலைப்போல*
*அவளுக்குள் ஏதோ ஒன்று*
*எங்கள்நட்புக்குத் தளமாக இருக்குதம்மா!*

**குறள் 1274**

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.

*ஏன் நான்*
*அடிக்கடி எனக்குள்ளேயே*
*மெல்ல சிரிக்கிறேன்!*
*ஓ!*
*மொட்டுக்குள் உள்ள*
*நறுமணம்போல*
*என்னோட புன்னகைக்குள்*
*உயிர்த்தோழியின்*
*நட்பைப்பற்றிய*
*உயிரோட்டம்*
*ஒன்றியுள்ளது*
*அதனால்தான்!*

**குறள் 1275**

செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன்று உடைத்து.

*ஏண்டி*
*நம்ம லதா இருக்காளே அவளோட*

நட்பை உருவாக்கி உயிர்த்தோழி ஆகனும்னு
முயற்சிசெய்றேன்!
எப்படா அவ பச்சவிளக்கு
காட்டுவானு ஏக்கத்துலேயே
இருக்கேண்டி!
அவ ஏழுபடிக்கிறா!
நானும் ஏழுதான் படிக்கிறேன்!
வண்ணவண்ண வளையல்கள்
குலுங்க நடந்துவரும்போது
ஒரு குறும்புப்பார்வை
பாப்பபாரு
அதுலதான் என்னோட
ஏக்கம் தீர்வதற்கு
மருந்து இருக்குடி!

**குறள் 1276**

**பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி**
**அன்பின்மை சூழ்வ துடைத்து.**

அம்மா!
எதிர்வீட்டு எழிலரசி காலையில இருந்து
இதுவரைக்கும் பத்து தடவையாச்சும்
வந்து அன்புகமழ நட்போட பேசுனாம்மா!
அப்பவே நெனச்சேம்மா!
இவ என்னமோ சொல்லப்போறானு நெனச்சேன்!
இந்த விடுமுறை முழுவதும்
அவங்க மாமா வீட்டுக்குப்
போகப்போறாளாம்!
வலியவந்து பேசுறப்பவே நெனச்சேன்!
இப்படி ஏடாகூடமா ஏதாச்சும்

*சொல்லுவான்னு! சரி தற்காலிகப்*
*பிரிவ தாங்கத்தானே வேணும்!.*

**குறள் 1277**

தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

*அக்கா!*
*என் நட்புத்தோழி வடிவுக்கரசி*
*ஈரப்பசை உள்ள குற்றாலம் பகுதியில்*
*இருக்கின்றாள்!*
*போனவாரம் வந்தவ இந்தவாரம் வந்திருக்கா!*
*ஆனால் என்னோடபேசிட்டு*
*கிளம்பிருவானு*
*அவமனச எப்படியோ*
*இந்த வளையல் தெரிஞ்சுகிட்டு*
*கையில் நிக்காம*
*கழன்றுகழன்று*
*வருதுக்கா!*

**குறள் 1278**

நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.

*ஏய் அமுதா!*
*இந்தக் குமுதா*
*ஊருக்குப்போறேன்னு*
*நேத்துவந்துசொல்லிட்டுப்*
*போனா!*
*இன்று பார்க்க முடியாதே*
*என்ற பிரிவின்*

*ஏக்கமோ*
*ஏழுநாளா கூடுகட்டனமாதிரி*
*மனச படுத்துதுடி!*

**குறள் 1279**

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது.

*ஞாயிறு*
*பொழுது விடிஞ்சுச்சா!*
*நான் இன்று ஊருக்குப்போறேன்!*
*பத்துநாள் விடுமுறையில்*
*போறேன்!*
*குட்டிப்பேத்திக்கிட்ட*
*சொல்லிட்டுப்போவோம்!*
*அவளுக்கும் பள்ளிக்கூடம்*
*விடுமுறைதான்!*
*பேத்தி வளையலப் பார்த்தாள்!*
*ஏங்கி மெலியப்போகும்*
*தோளைப்பார்த்தாள்!*
*தன்பாதங்களைப்பார்த்தாள்!*
*தானும் கூடவரனும்னு*
*குறிப்பால சொல்றா!*
*சரி அழைத்துச் செல்வோம்!*

**குறள் 1280**

பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு

*நானும் என்அம்மாவும்*
*சித்திவீட்டில் கடந்த மூன்றுநாளாக*
*தங்கி இருக்கின்றோம்!*

*எனக்கு பள்ளிவிடுமுறைதான்!*
*அம்மா இன்று புறப்படச்சொல்கின்றாள்!*
*சித்திமகள் கவிதாவுக்கு விடுமுறைதான்!*
*கவிதாவைப் பார்த்தேன்!*
*கண்களால் தூதுவிடுகின்றாள்!*
*இப்பொழுது போகவேண்டாம்*
*என்று கூறுகின்றாள்!*
*இது கவிதாவின்*
*அழகுக்கு அழகுசேர்க்கிறது!*
*ரசித்துச் சிரித்தேன்!*

## 129. புணர்ச்சி விதும்பல்

**குறள் 1281**

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

*அந்தத் தொடர்வண்டியில்*
*பயணிகள் ஏறுவதும்*
*இறங்குவதுமாக*
*நெரிநசலில் முட்டிமோதிக்*
*கொண்டிருந்தனர்!*
*நான் சாளரத்துக்கு அருகில்*
*உட்கார்ந்து*
*சிரித்துப் பேசிக்கொண்டிருந்தேன்*
*அம்மாவிடம்!*
*அப்போது என்னையும் அறியாமல்*
*என்பார்வை ஒருத்திமீது பட்டது!*
*அவளும் என்னைப் பார்த்தாள்!*

*அட ராகவியாநீ!*
*பாத்து ரெண்டுஆண்டுகள்*
*ஆச்சுடி!*
*உன்ன அடிக்கடி நெனப்பேண்டி!*
*வாடி கொஞ்சநேரம் பேசலாம்!*
*நீயும் இதே பெட்டிதானே!*
*நெனச்சாலே இன்பந்தான்!*
*நட்புத் தோழிய பாத்தா பேரின்பந்தான்!*
*எனக்குப் பிடிச்ச*
*பாடத்த படிச்சாத்தான் மகிழ்ச்சி!*
*நம்ம நட்பு அப்படிஇல்ல!*
*நினைத்தாலே இனிக்கும்!*
*பார்த்தாலோபரவசந்தான்!*

**குறள் 1282**

**திணைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்.**

*பூமா*
*பாமா*
*நாங்க ரெண்டுபேரும்*
*நட்புத் தோழிகள்!*
*பள்ளிக்கூடத்துல*
*எல்லோரும் பாத்துப்பாத்து*
*கண்ணுவச்சுட்டாங்க!*
*ஒருசின்ன காரணத்துல*
*பூமா கோவிச்சுக்கிட்டு போயிட்டா!*
*நட்பு ஏக்கத்துல*
*சோகச் சித்திரமாயிட்டேன்!*
*ஒருவழியா இன்னக்கி பூமாஎன்னைப்*

*பாக்கவர்ராளாம்!*
*இந்த வாய்ப்பை நல்லா*
*பயன்படுத்திக்கணும்!*
*நட்பு அன்பு*
*எல்லாம் பனைபோல*
*வளரவைக்கணும்!*
*தினையளவுகூட கோபம்*
*கொள்ளக்கூடாது!*
*எச்சரிக்கையா இருக்கணும்.!*

**குறள் 1283**

**பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்**
**காணா தமையல கண்.**

*பள்ளியில்*
*இடைவேளை விடும்போது*
*என் நட்புத்தோழி*
*நந்தினி*
*அவளுடைய*
*வகுப்புத் தோழிகளுடன்*
*இருக்கின்றாள்!*
*நானும் அவளும்*
*ஆறாவது படிக்கின்றோம்!*
*வெவ்வேறு வகுப்பு!*
*எனதுகண்கள்*
*என்னைப் புறக்கணித்து*
*தன்விருப்பம்போல் செயல்பட்டாலும்*
*என்நட்புத் தோழியைப்*
*பார்க்காமல்*
*திருப்தி அடைவதில்லை!*

## குறள் 1284

**ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து**
**கூடற்கண் சென்றது என்னெஞ்சு.**

*தேன்மொழி அஞ்சுபடிக்கிறா!*
*நான் நாலுபடிக்கிறேன்!*
*தேன்மொழி நேத்து*
*எல்லாருக்கும் முன்னாலே*
*என்ன எப்படி பேசிட்டா!*
*பேசுனது மட்டுமில்ல*
*பழிப்பு காட்டிட்டு போனா!*
*இன்னக்கி பாத்துக்குறேன்!*
*அந்தோ வர்ரா தேன்மொழி!*
*மனமே! நாம பேசக்கூடாது!*
*கோவிச்சு விலகனும்னு நெனச்சா*
*இந்த மனசு என்ன சிரிக்கவெச்சு*
*ஏதும் நடக்காத மாதிரி*
*பேசவச்சுருச்சே! தேன்மொழின்னு*
*வழிஞ்சேன்! ஆழமான நட்பின்*
*சிறப்பே இதுதான் போலும்.*

## குறள் 1285

**எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்**
**பழிகாணேன் கண்ட இடத்து.**

*அதோ மலர். வர்ரா!*
*அவ நாலாவது படிக்கிறா!*
*நான் அய்ந்தாம் வகுப்புபடிக்கிறேன்!*
*அவ அன்னக்கி எங்கிட்ட*
*நடந்துக்கிட்டது*

*எனக்கு கோபமாத்தான்*
*இருக்குது!*
*கண்ணுக்கு மைபோடும் போது*
*அந்தக்குச்சி*
*தெரியாதுல்ல*
*அதுமாதிரி அவசெஞ்ச*
*குத்தமெல்லாம் நேருலபாத்தா*
*மறஞ்சுபோயிருது!*

**குறள் 1286**

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை

*ரெண்டு நாளக்கி*
*முன்னால*
*இந்தக் குமுதா*
*என்ன*
*நோகடிச்சுட்டுப் போயிட்டா!*
*நான் ஆறாவது*
*அவ ஏழாவது படிக்கிறா!*
*இன்னக்கி என்னைப்பாக்க*
*வந்தா!*
*நேருக்குநேர் பாத்ததும்*
*அவசெஞ்ச தப்பைக்*
*காண்பதில்லை!*
*அவ பேசிட்டு*
*போனஉடனே*
*அவசெஞ்ச*
*தப்புகளைமட்டுமே*
*காண்கிறேன்!*

## குறள் 1287

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

*திரண்டுவரும் தண்ணீர்*
*இழுத்துச் செல்லும் என்று*
*தெரிந்தும் பாய்பவர் போல*
*என்உயிர்த்தோழி*
*காவியாவோட*
*பேசாம இருக்கமுடியாதுன்னு*
*தெரிஞ்சும்*
*டூவிட்டு முகத்தை*
*தூக்கிவச்சுக்குறது சரியா?*

## குறள் 1288

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

*கயல்!*
*நீ எனக்கு என்னதான்*
*துன்பம் விளைத்தாலும்*
*நட்பில் தொய்வை*
*ஏற்படுத்தினாலும*
*உன் பழக்கத்தில் மதிமயங்கி*
*இருக்கின்றேன்!*
*உள்ளம்*
*அன்பைச் சிந்தும்*
*அந்தப் பழக்கத்தால்*
*என்னால் விரும்பப்*
*படுகிறது உந்தன் நட்பு.*

## குறள் 1289

**மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்**
**செவ்வி தலைப்படு வார்.**

*எனது உயிர்த்தோழி அன்பரசி!*
*என்பெயர் மலர்விழி!*
*அவள் ஏழாம் வகுப்பு!*
*நானோ ஆறாம் வகுப்பு!*
*பெயருக் கேற்றாற்போல*
*அவள் காட்டும் அன்பு*
*நளினம்!*
*நட்பும் நளினம்!*
*புண்படுத்தாத சொற்களில்*
*இனிமை!*
*மலரினும் மென்மை!*
*இத்தகைய நட்பையும்*
*உயிர்த்தோழியாக அமையவும்*
*கொடுத்து வைத்திருக்க வேண்டும்.!*
*நான் கொடுத்துவைத்தவள்!*
*இழக்காமல் பழகவேண்டும்!*

## குறள் 1290

**கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்**
**என்னினும் தான்விதுப் புற்று.**

*நளினி!*
*அங்கபாரு*
*சாந்தா வர்ரா!*
*நானும் பேசனும்னுதான் காத்திருக்கேன்!*
*வர்ர வேகத்தபாத்தா*

*என்ன உண்டு இல்லனு ஆக்கிருவா!*
*கண்கள் இரண்டும் அனல்பறக்குது!*
*ஆ! என்னநடக்குது!*
*என்ன கட்டிப்பிடிச்சு*
*ஆனந்தக் கண்ணீர் சிந்துறா!*
*என்னவிட வேகமா*
*பழம்போட்டா!*
*உயிர்த்தோழின்னா இப்படித்தான்.*

## 130. நெஞ்சொடு புலத்தல்

**குறள் 1291**

அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது.

*நெஞ்சமே!*
*கவிதாவ பாரு*
*மரத்தடில உட்கார்ந்து*
*என்னுடைய நெனப்பு*
*கொஞ்சங்கூட இல்லாம*
*படிச்சுக்கிட்டுருக்கா!*
*அதுக்கு அவளுடைய*
*நெஞ்சும் ஒத்துழைக்குது!*
*நீயும் இருக்கியே!*
*என்ன வகுப்பறையில*
*உட்காரவிடாம*
*அவளையே நெனச்சுக்கிட்டு*
*இங்கேயே கூட்டிக்கிட்டே*
*வந்துட்டியே! சீ!*

## குறள் 1292

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறியென் நெஞ்சு.

*நெஞ்சமே!*
*பத்துநாளா*
*அந்தப் பாமதி*
*நம்மள கண்டுக்கவே இல்ல!*
*அவ நாலாவது நான் அய்ந்தாவது!*
*எனக்கு முந்தின வரிசையிலதான்*
*நிக்கிறா!*
*அவசிரிக்ககூட இல்ல!*
*நட்பு பாராட்டல!*
*ஆனா நீயோ*
*அவ வெறுக்கமாட்டானு*
*முந்திரிக்கொட்டை மாதிரி*
*முந்திமுந்தி போறயே!*
*இதுசரியா?*

## குறள் 1293

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.

*நெஞ்சே!*
*நானே பேசாமல்*
*இருக்கின்றேன்!*
*நீயோ மலர்விழியின்*
*பின்னாலேயே செல்கின்றாயே!*
*அவள் என்னை மதிப்பதே*
*இல்லை!*

*துன்பத்தில் உள்ளவர்க்குத்*
*துணையாக நண்பர் இல்லை என்பதற்காகவோ*
*இப்படி நடந்துகொள்கிறாய்?*

### குறள் 1294

**இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே**
**துனிசெய்து துவ்வாய்காண் மற்று.**

*நெஞ்சே!*
*என்னுடைய அக்காமகள்*
*ஊர்மிளாக்கு*
*ஐந்துவயதுதான்!*
*அவகிட்டபோனதும்*
*கொஞ்சநேரம் வம்பிழுத்து*
*அழவச்சு பொய்க்கோபத்த காட்டி*
*அப்புறமா*
*சிரிச்சு பேசி மகிழ்ச்சியா*
*இருக்கலாம்னு நெனச்சேன்!*
*ஆனா*
*நீ அந்த மாதிரி*
*அனுபவத்த உணராம*
*அவளப்பாத்த உடனே*
*படபடனுபேசி*
*சூழ்நிலைய கெடுத்துட்டியே!*
*ம்! அதப்பத்தியெல்லாம்*
*உங்கிட்டபேசி*
*என்னபயன்?*
*உங்கிட்ட அதப்பத்தியெல்லாம்*
*பேசமாட்டேன்*
*போ!*

**குறள் 1295**

> பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
> அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.

*என் நட்புத்தோழி*
*தேன்மொழி*
*மூன்றாம் வகுப்பு வரும்பொழுது*
*சிங்கப்பூர் சென்றுவிட்டாள்!*
*தினமும் கணினித்திரையில்தான்*
*பேசுவோம்!*
*இரண்டாண்டுகள் கழித்து*
*வந்திருக்கிறாள்!*
*இன்று என்னைப் பார்க்க வருகின்றாள்!*
*பார்க்காத வரைக்கும்*
*பார்க்கமுடியவில்லை*
*என்று எனது நெஞ்சம்*
*கெஞ்சி ஏங்கும்!*
*பா□ர்த்ததும் பிரிந்து*
*சென்று விடுவாளே என்று*
*அஞ்சி ஏங்கும்!*
*எனது நெஞ்சுக்கோ*
*எப்போதும் துன்பம்*
*வளர்பிறைதான்!*
*தொடர்கதைதான்!*

**குறள் 1296**

> தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
> தினிய இருந்ததென் நெஞ்சு.

*இன்றுமுதல்*
*ஆறாவது!*

*விடுதி வாழ்க்கை!*
*ஐந்து வரைபடித்த*
*பள்ளியில் என்னுடன்*
*பழகிய கயல்விழியின்*
*நட்புபாசம் கலந்தது!*
*நினைக்க நினைக்க ஏக்கந்தான்!*
*மலர் மலர் என்று*
*சதா அழைத்துக்கொண்டே இருப்பாள்!*
*காதில் எதிரொலித்துக்கொண்டே*
*உள்ளது!*
*சண்டையும் போடுவாள்!*
*இப்பொழுது பிரிந்துவந்து*
*அவளுடைய தவறுகளை*
*அசைபோட்டால்*
*எனது நெஞ்சம் என்னைத்*
*தின்பதுபோல் வாட்டி வதைக்கிறது!*

**குறள் 1297**

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

*என்னுடைய பாட்டி*
*நிறையகதை சொல்லுவாங்க!*
*பாட்டுப்பாடு வாங்க!*
*ஆளைப்பாத்த உடனே*
*வார்த்தை கட்டிப்பாடு வாங்க!*
*எங்கபெரியப்பா வீட்டுக்கு*
*போயிருக்காங்க! போரப்போ*
*என்னை திட்டுதிட்டுன்னு*
*திட்டி அழவச்சுட்டாங்க!*

*கோவிச்சுக்கிட்டு மறக்கலாம்னா*
*இந்த அறிவில்லாத நெஞ்சோட*
*சேந்து மறக்கக்கூடாத*
*நாணத்தையும் சேத்துல்ல மறந்துட்டேன்!*
*என்ன மனசோ! என்னபாசமோ!*

**குறள் 1298**

**எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்**
**உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.**

*ஏழாவது படிக்கும்*
*நானும்*
*ஆறாவது படிக்கும்*
*மாலாவும்*
*நட்புத்தோழிகள்!*
*அவளுடைய அப்பாவுக்கு*
*மாறுதல்கிடைத்து*
*டில்லிக்குச் சென்றுவிட்டனர்!*
*அடுத்த ஆண்டுதான் வருவாளாம்!*
*அவளைத்திட்டினால் சரியில்லை*
*என்று*
*எனது நெஞ்சம்*
*அவளுடைய அன்பையும் நட்பையுமே*
*நினைத்துக் கொண்டிருக்கிறது.*

**குறள் 1299**

**துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய**
**நெஞ்சந் துணையல் வழி.**

*ஏம்மா!*
*என் உயிர்த்தோழி*
*உடல்நலம் இல்லாம*

*மருத்துவமனையில*
*இருக்குறா!*
*அவ அங்கஇருக்கா!*
*நான் இங்கஇருக்கேன்!*
*மனசு துயரத்துல இருக்குது!*
*இந்தத் துன்பத்துல*
*உரிமையோட இருக்கவேண்டிய*
*மனமே துணையா*
*இல்லாட்டி*
*வேறு யாரும்மா*
*துணையா இருப்பாங்க?*
*நீங்களே சொல்லுங்கம்மா!*

**குறள் 1300**

தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி.

*எதிர்வீட்டுக் கனகா*
*எனது நட்புத்தோழி!*
*அவளுடைய தோழி*
*மேனகாவும் என்னோட*
*பழகுவா!*
*எனது மனம்போன்ற*
*கனகாவே விலகிப்போறா!*
*உரிமையுள்ள கனகாவே*
*உறவில்லை!*
*அயலார்போல உள்ள*
*மேனகா*
*நட்பில்லாம இருப்பது*
*எளிதுதான்.*

## 131. புலவி

### குறள் 1301

புல்லா திராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.

*நெஞ்சே!*
*மாலா நாலாம் வகுப்பு!*
*பாலாமணி நானோ அய்ந்தாம் வகுப்பு!*
*ரெண்டு நாள்களுக்குப*
*மாலாவைப் பாக்கப்போறோம்!*
*திடீர்னு போறோம்!*
*அவ ஓடிவருவா!*
*நாம கொஞ்சம் பொய்க்கோபத்தைக்*
*காண்பிக்கணும்!*
*அந்தநேரத்துல*
*அவபடுற துன்பத்தை*
*ரசிக்கணும்!*
*அதுக்காக அவசரப்பட்டு*
*அவள கட்டிப்பிடிக்காம*
*இருக்கணும் தெரிஞ்சுதா?*

### குறள் 1302

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

*இந்தபாரு காஞ்சனா*
*என்ன கோபம்னாலும்*
*பேசித் தீர்த்துக்கணும்!*
*உம் முனுமுகத்தைத்*

*தூக்கிவைக்கக் கூடாது!*
*நான்இப்படித்தான்! பொன்னி!*
*நீஎன்னவிட ஒருவகுப்பு*
*கூடுதலாக ஆறாவது படிக்கலாம்!*
*அதுக்காக விட்டுத்தரணுமா?*
*அம்மாதாயே!*
*எல்லாமே உப்புபோல அளவா*
*இருக்கணும்!*
*அதிகமாப் போனா கசந்துரும்!*
*போதும்போதும் கோபமெல்லாம்.*
*தெரிஞ்சுதா!*
*மணியடிச்சுருச்சு!*
*வகுப்புக்குப்போ!*
*சிரிப்பப்பாரு!*

**குறள் 1303**

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

*ஏண்டி கோமதி*
*நம்ம தோழி வளர்மதியோட*
*பேசமாட்டேங்கற?*
*பாமதி! அவதானே சண்டபோட்டா*
*அவதானே பேசணும்!*
*கோமதி! அவ ஏற்கனவேநொந்து*
*வாடிப்போயிருக்கா!*
*உன்னோட பேசனும்னு துடிக்கிறா!*
*பழம்போடாம போனா*
*துன்பத்துல இருக்குறவ*
*துன்பம்*
*மேலும் அதிகமாகும்டி!*

**குறள் 1304**

**ஊடி யவரை உணராமை வாடிய**
**வள்ளி முதலரிந் தற்று.**

*நளினி!*
*என்னம்மா!*
*ஆமா நீ வள்ளியோட*
*பேசமாட்டேங்கற!*
*பாக்கமாட்டேங்கற!*
*அம்மா! அவதாம்மா*
*கோவிச்சுக்கிட்டா!*
*சரிசரி! நட்புல இதெல்லாம் இருக்குந்தான்!*
*அவள சமாதானப்படுத்தி இணக்கமாபோ!*
*இது எப்படி இருக்குன்னா*
*ஏற்கனவே வாடிப்போன*
*கொடியோட அடிப்பகுதிய*
*அறுக்குறமாதிரி இருக்கு!*
*புரிஞ்சுதா?*
*அஞ்சாவது ஆறாவதுலேயே*
*இப்படியா!*

**குறள் 1305**

**நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை**
**பூஅன்ன கண்ணார் அகத்து.**

*குமுதாவோட நானோ*
*கோவிச்சுக்கிட்டு*
*பேசாம இருக்கணும்!*
*அவளுடையமலர்விழி*
*துள்ளவளருதே*
*அவமனசுல பொய்க்கோபம்*

*அதுதான் இந்த அமுதாவோட*
*அழகாகும்!*

**குறள் 1306**

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.

*ஏம்மா தேன்மொழி*
*ஏழாவது படிக்கிறநீ!*
*மலர்விழி அய்ந்தாவது*
*படிக்கிறா!*
*நல்லா பழகுறீங்க!*
*நட்புத்தோழிகளா இருக்குறீங்க!*
*நீஏன் அவளோட*
*அடிக்கடி மொறச்சுக்குற?*
*அட பூவிழி!*
*நட்பு, அன்பு இதிலெல்லாம்*
*சின்னதும் பெரியதுமா*
*கோபதாபங்கள் விளையாட்டா*
*இருந்தாதான் நல்லாருக்கும்!*
*இல்லன்னா நட்புங்கறது*
*முதிர்ந்த பழமும்*
*இளங்காயுமா*
*சுவையின்றி இருக்கும் தெரியுமா?*
*சரிசரி என்னமோ போங்க!*
*ஏதோ நல்லா இருந்தாசரி!*

**குறள் 1307**

நோதல் எவன்மற்று நொந்தாரென் றுஅஃதறியும்
காதலர் இல்லா வழி.

*ஏண்டி உனக்கு என்னாச்சு?*
*முகத்த உம்முனு வச்சுக்கிட்டே*

*பள்ளிக்கூடத்துல இருந்துவர்ர?*
*பாரும்மா! அந்தக் கயல்விழி*
*என்னோட பேசமாட்டேனு*
*சொல்லிட்டா!*
*என்ன கண்டுக்கவே*
*மாட்டேங்குறாம்மா!*
*என்னோட வருத்தத்த*
*புரிஞ்சிக்கிற நட்புத்தோழி*
*இல்லாதப்ப நான்மட்டும்*
*வருத்தப்பட்டு பாரத்த*
*சுமந்து என்ன ஆகப்போகுதும்மா?*
*எல்லாம்என்னோட*
*நேரந்தான்!*

**குறள் 1308**

நோதல் எவன்மற்று நொந்தாரென் றுஅஃதறியும்
காதலர் இல்லா வழி.

*ஏம்ப்பா!*
*என்நட்புத் தோழி தேன்மொழி*
*என்னோட டூவிட்டா!*
*ஆனா அவபாட்டுக்குப்*
*போறா வர்றா கண்டுக்கவே*
*இல்லப்பா!*
*அவளால நான் வருத்தப்படறேன்னு*
*அவளே நெனக்காம*
*இருக்குறா!*
*அந்த மாதிரிதோழி இல்லாதப்ப*
*நான் மட்டும் வருந்துறதுனால*
*என்னபயன்?*
*சொல்லுங்கப்பா!*

*ஏம்மா எனக்கெதுக்குமா*
*இதெல்லாம்!*

**குறள் 1309**

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

*ஏய்! கயல்! சித்ரா எப்படி இருக்கா?*
*சித்ராவ பத்தி*
*ஏங்கிட்ட கேக்கற!*
*நீஏழாவது!*
*அவ ஆறாவது!*
*அவளோட சண்டபோட்டு*
*அழவச்சுட்ட!*
*இல்லடி!*
*நீரும் நிழலை அடுத்திருந்தா குளிர்ச்சியா*
*இருக்கும்னு எங்காஅப்பா திருக்குறள்ள*
*இருந்து சொன்னாரு! அதுபோல*
*நம்மகிட்ட அன்பா இருக்குறவங்ககிட்ட*
*டூவிட்டா*
*அதுல ஒருமகிழ்ச்சி இருக்குடி!*
*அதனாலதான் டூவிட்டேன்!*
*சித்ராவர்றா!*
*நீயாச்சு அவஆச்சு!*
*நான்வரேன்!*

**குறள் 1310**

ஊடல் உணங்க விடுவாரொ(டு) என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா.

*அம்மா*
*அந்த தமயந்திக்கு என்னாச்சுனு*

*தெரியல!*
*திடீர்னு பேசமாட்டேங்கறா!*
*கண்டுக்காம போறா!*
*சரிசரி போறானு*
*நானும் வந்துட்டேன்!*
*ஆனால் என்மனசோ*
*தமயந்திகிட்ட போயிபோயி பேசுன்னு*
*சொல்லுதும்மா!*
*அவவந்து*
*வேடிக்கை பாத்துக்கிட்டு இருக்கா!*
*மனசுமட்டும் பேசத்தூண்டுதுன்னா*
*அதுக்கு ஆசைதானம்மா*
*காரணம்!*

## 132. புலவிநுணுக்கம் (பொய்க்கோபம்)

**குறள் 1311**

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

*ஏய்! தாமரை!*
*அந்த எழிலரசி*
*ஆறாவது படிக்கிறா!*
*நான் அய்ந்தாவது படிக்கிறேன்!*
*என்னோட உயிர்த்தோழிஅவ!*
*சரி எங்கிட்டதான்*
*அப்படி இருக்குறானு பாத்தேன்!*
*ஆனால் அங்கபாரு*
*அவளசுத்தி ஆறுபேறு*

*பேசுபேசுன்னு பேசிக்கிட்டே*
*இருக்காங்க!*
*அவளும் நட்போட சிரிக்கிறா!*
*எல்லாரும் அவளோட நட்பை*
*விரும்புறாங்க!*
*இப்படி இருக்குறவ கிட்ட*
*நான் நட்பை*
*விரும்பமாட்டேம்பா!*

**குறள் 1312**

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

*ஏண்டி வேணி!*
*இந்த ராணி ஏண்டி*
*இப்படித் தும்மிக்கிட்டே இருக்கா!*
*உடல்நிலை சரியில்லையோ என்னவோ!*
*உன்னுடைய உயிர்த்தோழிதானே*
*கேக்கமாட்டியா?*
*இந்தபாரு, அவஎன்னோட*
*காரணமில்லாம*
*சண்டபோட்டு*
*பேசமாட்டேங்கறா!*
*நம்மல கடந்துபோறப்ப*
*தும்முறா!*
*நீடுவாழ்க என்று*
*நான்வாழ்த்துவேனு*
*நெனக்கிறா!*
*நானா வாழ்த்திப்*
*பேசுவேன்?*

## குறள் 1313

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

*வாம்மா மங்கம்மா!*
*ஏழு நாளக்கி அப்புறமா*
*பாக்கவந்திருக்க!*
*இல்ல தங்கம்மா!*
*எங்க பள்ளிக்கூடத்துல*
*ஆறாவதுக்கு சிறப்புத்தேர்வு*
*வச்சிட்டாங்க!*
*அதான்வரல!*
*அதுசரி*
*தலயில பூச்சரத்த அடுக்கி*
*வச்சிருக்க!*
*என்ன கோவப்படுத்த*
*அந்த கோகிலத்துக்குக்*
*காட்டுறதுக்கு*
*வச்சிட்டு வந்தியாக்கும்!*
*இதெல்லாம் நல்லாருந்தா*
*சரி.*

## குறள் 1314

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

*நம்முடைய நட்பு*
*எனக்கு மகிழ்ச்சியாக*
*இருக்குடி! காவியா!*
*யார் யாரையோவிட*
*நம்நட்பு அருமைதானடி!*

*ஏய்! ஓவியா!*
*யாரைவிட யாரைவிட*
*சொல்லிரு! எனக்கு*
*மனசு கொந்தளிக்குது!*
*சொல்லிரு!*
*இல்ல உன்னோட பேசவேமாட்டேன்!*
*ஆமா!*

**குறள் 1315**

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.

*என் அன்புத் தோழியே!*
*கண்ணம்மா!*
*ஏனம்மா இப்படி அழுகின்றாய்?*
*இந்தப் பிறவியில் நாம்*
*பிரியமாட்டோம் என்றுதானே*
*சொன்னேன்! தப்பாகசொல்லவில்லையே! தோழி!*
*அம்மா பொன்னம்மா*
*அப்ப அடுத்தபிறவியிலே*
*பிரிஞ்சிடுவேன்னு*
*சொல்றயா!*
*சரிம்மா தப்புதாயே!*
*சொல்லல! போதுமா!*

**குறள் 1316**

உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

*வாம்மா மலர்விழி!*
*நினைத்தேன் வந்தாய்*
*நூறுவயதுன்னு*

*பாடனும்போல இருக்கு!*
*நீயோ அஞ்சாவது படிக்கிற*
*தேர்வுஎப்படி எழுதுனியோன்னு*
*உன்னைத்தான் இப்பத்தான்*
*நெனச்சேன்வந்துட்ட!*
*அப்ப இவ்வளவுநேரமா*
*மறந்திருந்தீங்க போலஇருக்கு*
*கயல்விழிஅக்கா!*
*அப்படித்தானே!*
*போங்க! உங்களோட பேசமாட்டேன்!*
*என்னடா நட்புக்கு வந்த சோதனை!*

**குறள் 1317**

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.

*நான் தும்மினேன்.*
*என் உயிர்த்தோழி*
*ஆறாவது படிக்கும்*
*கவிதா*
*வழக்கம்போல் வாழ்க வாழ்க*
*என்றே வாழ்த்தினாள்!*
*மறுநொடியே*
*பாமதி!*
*எந்தத் தோழி உன்னை*
*நினைத்தாள்?*
*தும்மினாய்?*
*எனக்கேட்டாள்!*
*என்னைவிட ஒருதோழியா?*
*யாரது? சொல்சொல்!*
*சொல்லவில்லை உன்னோடு*

*பேசவேமாட்டேன் !*
*சினங்கொண்டு*
*எழுந்துபோய்விட்டாள் !*

**குறள் 1318**

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

*வம்பு எதற்கென்று*
*இந்தமுறை*
*வந்ததும்மலை*
*அடக்கினேன் !*
*நமுட்டுச் சிரிப்புச்*
*சிரித்தாள் கவிதா !*
*பாமதி ! என்றாள் !*
*பார்த்தேன் கலக்கத்துடன் !*
*ஓ ! உனக்கு இன்னொரு*
*உயிர்த்தோழி இருக்கின்றாளோ !*
*அவள் நினைத்ததும் தும்முகின்றாயோ !*
*கண்டுபிடித்துவிடுவேன் என்று*
*அடக்குகின்றாயோ !*
*என்று அழுதேவிட்டாள் !*
*இப்படியும் நட்பா ?*

**குறள் 1319**

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.

*கலையரசி !*
*இப்பநாம*
*ஆறாவது வந்துட்டோம் !*

*நாலாவதுல இருந்து*
*ஒண்ணா படிச்சுக்கிட்டுவர்றோம்!*
*உன்னோட சண்டபோடற*
*மனப்போக்கை மாத்திக்கோ!*
*நானும் உன்னோட*
*ராசியாயிட்டேன்! விடு!*
*மகிழ்ச்சியா இருப்போம்சரியா?*
*ஓகோ! இப்படித்தான்*
*உன்னோட நட்புத்தோழிகளிடம்*
*நடந்துக்குறுவபோல இருக்கு!*
*சொல்லுதமிழரசி! என்றே*
*சினந்தாள்.*

**குறள் 1320**

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.

*ஏய் மது!*
*என்னஅப்பிடிப்பாக்குற!*
*இல்ல இன்று உனக்குப்பிறந்தநாள்!*
*இந்த உடை உனக்குஅழகா*
*இருக்கு தேவி!*
*இந்தபாரு*
*என்னயாரோட ஒப்பிட்டு*
*அப்படிப்பாக்குற!*
*ஒப்பிட்டுப்பாக்குறது*
*எனக்குப்பிடிக்காது!*
*தெரியும்ல!*
*அம்மா கோவிச்சுக்காதே!*
*சும்மாதான் பாத்தேன்!*

*இன்று நாம் இணக்கமா*
*இருப்போம்! சரியா?*

## 133. ஊடல் உவகை

**குறள் 1321**

இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு.

*நாம ஆறாவது படிக்கிறோம்!*
*வள்ளி அய்ந்தாவது படிக்கிறா!*
*அவளோட நீ ஒருவாரமா*
*பேசல!*
*அவஉன்னைச் சுத்திச்சுத்தி வர்றா!*
*நீஏன் பிகுபண்ற? பாவரசி!*
*இந்தபாரு அவமேல குத்தமில்ல!*
*ஆனால் இப்படி பொய்க்கோபம்*
*காட்டினா*
*என்மேல நட்பும் அன்பும்*
*வளரும்! தழைக்கும்!*
*அதுக்குத்தான்! புரிஞ்சுதா?*
*என்னமோ சொல்ற*
*கேட்டுக்குறேன்!*

**குறள் 1322**

ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

*என்உயிர்த்தோழி அரசி*
*என்னோட பேசாம*
*வெலகியே இருக்குறா!*

*இதுவருத்தமா இருக்கு!*
*எங்களோட ஊஞ்சலாடும்*
*அன்புல தொய்விருந்தாலும்*
*இந்த வயசுலவர்ர கோபச் சீண்டல்கள்*
*காரணமா இருந்தாலும்*
*அதனால் ஏற்படும்*
*துன்பம் பெருமையுடையதாகவே*
*இருக்குது.*

**குறள் 1323**

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து.

*அம்மா!*
*ஒருசந்தேகம்!*
*உனக்கா? சொல்லு!*
*என்உயிர்த்தோழி*
*செல்லம்மா அய்ந்தாவது படிக்கிறா!*
*நான் ஆறாவது படிக்கிறேன்!*
*அவளோட ரெண்டுநாளா*
*நான்பேசல!*
*ஆனால் அவ அன்புக்கும்*
*நட்புக்கும் அளவே இல்ல!*
*நிலத்தோட நீர்கலந்ததுபோல*
*நெருக்கமான நட்பு!*
*அவளோட கோவிக்கறதுக்கு*
*இணையா மகிழ்ச்சி.கொடுக்கின்ற*
*வேற உலகம்உண்டா!*
*சொல்லுமா!*
*உனக்கு வேறவேலையே இல்ல.*

## குறள் 1324

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.

*அப்பா*
*பத்துநாள்ல ஊரிலே*
*இருந்து வந்துருவேன்னு*
*சொன்னாரு பன்னிரண்டு நாளாச்சு!*
*இன்னக்கி வந்துட்டாரு!*
*நானும் கோவமா கட்டிப்பிடிச்சுப்*
*படுத்துக்கிட்டேன்!*
*நாலாவது படிக்கிற எனக்கு*
*இன்னும் ரெண்டுநாள்ல*
*தேர்வுவருது!*
*அதுக்குச் சொல்லித்தர அப்பாவுக்கு நேரமில்ல!*
*இந்தக் கோவத்துக்குள்ள*
*என்மனச உடைக்கிற ஆயுதங்களும் இருக்கு!*
*என்னசெய்ய!*

## குறள் 1325

தவறிலர் ஆயினும்தாம் வீழ்வார்மென் றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து.

*என்மேல எந்தத்*
*தப்புமே இல்லை!*
*ஆனாலும் உயிர்த்தோழிமேல*
*கோபப்பட்டு*
*விலகி நின்னு*
*தனியா தேர்வுக்குப்*
*படிக்கிறேன்!*
*அவளோட சேராம இருக்குறதுலயும்*

*மகிழ்ச்சி இருக்கு.*
*ஆனாலும் ஏக்கமா இருக்கு.*

### குறள் 1326

**உணலினும் உண்டது அறல்இனிது காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.**

*பாட்டி!*
*நாம சாப்பிடுவதைக் காட்டிலும்*
*சாப்பிட்ட உணவு*
*செரிக்கிறது மகிழ்ச்சி!*
*அதுபோல என் உயிர்த்தோழி*
*பாலாவோட*
*நட்பா அன்பா இருக்குறதுக்கு*
*முன்னாடி*
*அவள கோபப்படுத்தி*
*உம்முனு இருக்குற*
*அவமுகக் குறிப்பைப்*
*பாக்குறது மகிழ்ச்சிதான்*
*பாட்டி!*
*என்ன சொல்றீங்க?*
*ஏண்டி அவநாலாவது படிக்கிற சின்னபொண்ணு!*
*நீயோ ஆறாவது படிக்கிற!*
*தேவையாஉனக்கு?*

### குறள் 1327

**ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்**
**கூடலிற் காணப் படும்.**

*அம்மா!*
*நான் லதாவோட*
*ரொம்பநாள் பேசல!*

பரவாயில்லனு நானே
வலியபோயி சமாதானப்படுத்தி
பேசிட்டேம்மா!
இப்பதா மனசு லேசாஇருக்கு!
இந்தமாதிரி பொய்ச்சண்டையில
தோத்தவங்கதாம்மா
வெற்றிபெற்றவங்க! தெரியுமா!
அந்த உண்மையெல்லாம்
ஒன்றாக சேந்து
பேசும்போது மனசுக்கு
மகிழ்ச்சியா இருக்கும்!
அப்போது தெரியும்மா!
இதெல்லாம் உனக்குளங்க
தெரியப்போகுது?
எனக்கு இதுவும் வேணும்!
இன்னமும் வேணுண்டி!

**குறள் 1328**

**ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்**
**கூடலில் தோன்றிய உப்பு.**

ஏண்டி கயல்
நம்ம கவிதா,
அதாண்டி அய்ந்தாவது
படிக்கிறாள்ள அவளப்பாரேன்
என்னப்பார்த்து வியர்க்க விறுவிறுக்க மகிழ்ச்சியா
வர்றா!
அதப்பாத்தா எனக்கு
மகிழ்ச்சியா இருக்குது!
ஏன்னா ரெண்டு நாளா

*பேசாம இன்னக்கிதான்*
*பேசுறோம்!*
*மறுபடியும்*
*சண்ட போட்டா இப்படி*
*வியர்க்கவியர்க்க*
*வருவால்ல!*
*இந்தச் செல்லக் கோபம்னா*
*அதோட இன்பமே தனிதான்!*

**குறள் 1329**

ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா.

*எங்கள் வீட்டுக்கு*
*என் அத்தைமகள்*
*பாமதி ஊரிலிருந்து*
*வந்திருந்தாள்!*
*அருமையா பேசினா!*
*என்னஆச்சுனுதெரியல!*
*என்னோட முகங்கொடுத்துப்*
*பேசமாட்டேங்கறா!*
*மாடி அறைக்கு வெளியே*
*உக்காந்திருக்கா!*
*நிலவொளி அருமையா இருக்கு!*
*அவமுன்னால*
*நானோ என்னோட*
*பேசுடி பேசுடின்னு*
*கெஞ்சிக்கிட்டே இருக்கேன்!*
*அவளோட கோபமுகமும்*
*அழகாஇருக்கு!*

*அஞ்சு வயசுக் குழந்தை*
*கொள்ளை அழகு!*
*இந்த இரவுநேரம்*
*நீடிக்காதானு*
*ஏங்கித் தவிக்கிறேன்!*
*அவகிட்ட கெஞ்சிக்கிட்டே*
*இருக்கணும்போல இருக்கு.*
*இன்பத்துப்பால்நிறைவு*
*குழந்தைகளுக்காக.*

**குறள் 1330**

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

*என் உயிர்த்தோழி*
*கலையரசி*
*ஆறாவது படிக்கின்றாள்!*
*எழிலரசி நானோ*
*ஏழாவது படிக்கின்றேன்!*
*இருவரும் இணைபிரியாத தோழிகள்!*
*நட்பு என்ற முகத்தின்*
*இருவிழிகளே நாங்கள்தான்!*
*எங்களுக்குள்ளும் பொய்க்கோபம்,*
*செல்லச்சிணுங்கல், பழுப்புகாண்பித்தல்*
*போன்ற குறும்புகளும் உண்டு!*
*பொய்க்கோபத்தில் ஆத்திரம்*
*கொண்டு விலகிச்செல்வோம்!*
*தணிந்தவுடன் மீண்டும்*
*சரிசரி மன்னிச்சுக்கோடி என்று*
*சேர்ந்து சிரிப்போம்!*

நட்பிற்கு இன்பமே
செல்லச்சண்டைதான்!
பிரிந்துசேரும் பொழுது
அந்தச்சண்டை மீட்டுவதே
ஓர் இன்பராகந்தான்!

❖❖❖

# அறிமுகத்துளிகள்



| | | |
|---|---|---|
| பெயர் | : | சு.பெ. பாபாராஜ் (மதுரைபாபாராஜ்) |
| தந்தை | : | தெய்வத்திரு. சு.பெருமாள்–முத்துசுப்பு |
| தாய் | : | தெய்வத்திரு. தேவகி–முத்துசுப்பு |
| பிறந்தநாள் | : | 11.10.1948 |
| மனைவி | : | பா. வசந்தா |
| பள்ளிகள் | : | கேப்ரன்ஹால்–மதுரை<br>புனித ஜோசப் கான்வெண்ட்–மதுரை<br>சேதுபதி உயர்நிலைப்பள்ளி–மதுரை |
| கல்லூரிகள் | : | மதுரைக் கல்லூரி, மதுரை<br>அழகப்பா கலைக்கல்லூரி, கரைக்குடி |
| பட்டம் | : | அறிவியல் இளவல்–பயிரியல் |
| பணிபுரிந்த நிறுவனங்கள் | : | பென்னெர் (இந்தியா) லிட்மதுரை, பிஎம்எஃப் பெல்டிங்க்ஸ் லிட், சென்னை |

பொறுப்பு : முதுநிலைஅலுவலர்(ஓய்வு)

இல்ல முகவரி : மதுரை பாபாராஜ்
திருவேரகம்
34/10, தலைமைச் செயலக்குடியிருப்பு,
நகர எல்லைச்சாலை,
ஆதம்பாக்கம், சென்னை–600 088

தொலைப்பேசி : 044–22447661

கைபேசிஎண் : 900 3260 981

மின்னஞ்சல் : spbabaraj@gmail.com

இணையதளம் : www.maduraibabaraj.blogspot.com

**ஊக்கச் சிறகுகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரதியார் நூற்றாண்டு விழா | 1982 | புதுவை அரசுவிழா |
| 2. | திருச்சி வானொலி நிலையம் | 08.07.1986 | கவிமுகில் நிகழ்ச்சி |
| 3. | பாரதிதாசன் நூற்றாண்டு விழா | 1991 | தமிழ்நாடு அரசு விழா (100 கவிஞர்கள் பங்கேற்பு) |
| 4. | அமரர் ராஜீவ்காந்தி கவிதைப் போட்டி | மே1 993 | மதுரை மாவட்டம் முதல்பரிசு |
| 5. | மதுரை வானொலி நிலையம் | 18.08.1994 | சரவிளக்கு |
| 6. | சென்னை வானொலி நிலையம் | | சினிமா நேரம் சிறப்பு விருந்தினர் |
| 7. | பொதிகை தொலைக்காட்சி | 26.09.2003 | பேச்சுக் கச்சேரி |
| 8. | பொதிகை தொலைகாட்சி | 13.09.2005 | முத்தமிழ் மன்றம் |
| 9. | பொதிகை தொலைகாட்சி | 16.02.2007 | கவிதை பாடு குயிலே |

**வெளிச்சம் தொலைக்காட்சி**
**வள்ளுவன் வாக்கு அறத்துப்பால் நிறைவு**

**கவிஞரின் நூல்கள் இதுவரை:**

- *கவிச்சாரல் – 1981*
- *கவியமுதம் – 1984*
- *மகரவிளக்கு – 1985*
- *மரபுகளின் அருவி – 1989*
- *மகிழம்பூ – 1997*
- *கிளிஞ்சல்கள் – 2002*
- *மகரயாழ் – 2004*
- *அற்புதத்தரு: சீரடி சாய்பாபா அற்புதங்கள் (கவிதை வடிவில்) – 2005*
- *திருக்குறள் பேழை – 2006*
- *திருக்குறள்–1330 (வெண்பாவடிவில்) – 2008*
- *வசந்தம் – 2010*
- *பூச்சரம் (அகரவரிசைக் கவிதைகள்) – 2012*
- *தேனருவி – 2014*
- *வாழ்வியல் அந்தாதி – 2015*
- *கம்பராமாயணம் அயோத்தி முதல் கிட்கிந்தை வரை கவிதைப் பரல்கள் – 2015*
- VIRTUE - *திருக்குறள் அறத்துப்பால் (ஆங்கில விளக்கம்) – 2018*
- ATTITUDES OF LOVE - *திருக்குறள் இன்பத்துப்பால் (ஆங்கில விளக்கம்) – 2018*

*வணக்கம் ஐயா.. ஒரு ஒரு குறள் கேட்கும் போது இதற்கு எப்படி குழந்தைகளுக்குப் பொருந்தும் படி விளக்கம் சொல்வார் என்று ஒரு* curiosity *இருந்து கொண்டே இருந்தது.*

*இந்த* perspectives la if *இன்பத்துபால்* taught in schools.. it would help to develop organically a healthy friendship amongst the same gender as well as the opposite.

In the era of sex education being the moot point, I don't think education on gender can be better explained than this. Subtle and substantive!

*நன்றி ஐயா*

**திரு. தா.மு.சேனாபதி**

❖❖❖

‘யான்பெற்ற இன்பத்தைப் பெறுக இவ்வையகம்’ என்று, திருக்குறள் என்னும் தேனடையைப் பிழிந்து பிழிந்து எல்லோருக்கும் வாரி வழங்கிவிட முயற்சித்துள்ளார். யாருக்கு எப்படி வழங்கலாம், வழங்க முடியும் என்று சிந்தித்து, தனது மழலை வரிகளில் சிறந்த கருத்துகளை உள்ளடக்கி, உயர்த்தித் தருகின்றார்.



தமிழுடை ஞாலம் மதுரை பாபாராஜ் அவர்களைத் தம்மிரு கைகளை நீட்டி எதிர்கொள்கின்றது. எதிர்காலத்தில் இவரது முயற்சியைப் பலரும் போற்றுவர்.

ஊடலுவகை அதிகாரத்தில் 1330ஆவது திருக்குறளுக்கு ஆசிரியரின் கவிதை வரிகள் அப்படியே இவரின் புதிய முயற்சிக்கும் பொருந்தும்.

**“நட்பிற்கு இன்பமே**
**செல்லச் சண்டைதான்!**
**பிரிந்து சேரும்பொழுது**
**அந்தச் சண்டை மீட்டுவதே**
**ஓர் இன்பராகந்தான்!”**

மதுரை பாபாராஜ் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து, பல புதிய எழுச்சிமிகு நூல்களையும் படைத்திட வேண்டும்.

நல்வாழ்த்துகள்!

வாழ்க தமிழ்! வளர்க இலக்கியவின்பம்!!

**– நற்றமிழ் செ.வ. இராமாநுசன்**

**சான்றோர் தளம்**

**விலை ரூ. 50**